06th AUGUST 2026

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 115 | பக்கங்கள் - 19 | editor.uthayam@gmail.com

## மத்திய மாகாண ஆளுனராக சுரங்க பெர்ணான்டோ சத்தியப் பிரமாணம்



மத்திய மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற சமூக

02ம் பக்கம்பார்க்க...

# கம்மன்பில, விமல்,திலித் ஜயவீர உட்பட அறுவருக்கெதிராக வழக்குத் தாக்கல்

### நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியீடு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமைக்காக, அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட அறுவருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் பசன் அமரசிங்க முன்னிலையில் நேற்று இந்தத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச, பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, திலித் ஜயவீர, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜகச்சவின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டாரஅஸ ங்க நவரத்ன மற்றும்

02ம் பக்கம்பார்க்க...

## எம்.ஏ.சி.மஹ்சூம் முத்திரை மற்றும் முதல் நாள் தபால் உறை வெளியீடு



02ம் பக்கம்பார்க்க...

## தமிழ், முஸ்லிம்களின் உரிமைகள் நலன்கள் குறித்து தெளிவுபடுத்தினோம்

### இந்திய தூதுவருடனான சந்திப்பு குறித்து நிஸாம் காரியப்பர் எம்.பி.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார்

02ம் பக்கம்பார்க்க...

### மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச குர்ஆன் போட்டி:

## 133 நாடுகளிலிருந்து 334 போட்டியாளர்கள் போட்டி இன்று (6) ஆரம்பம

### இலங்கையிலிருந்து நால்வர் பங்கேற்பு



## மிட்சிகன் செனட் வேட்பாளர் தேர்வில் ஜனநாயக் கட்சியின் அப்துல் சயீத் வெற்றி



முற்போக்கு வாதியான அப்துல் எல்-சயீத், மிச்சிகனின் ஜனநாயகக் கட்சியின் அமெரிக்க செனட் வேட்பாளர் தேர்வில், பிரதிநிதி ஹேலி ஸ்டீவன்ஸை சொற்ப வாக்கு வித்தி யாசத்தில்

02ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதி, இந்திய வெளிவிவகார செயலாளர் சந்திப்பு

### முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடல்!



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி (Vikram Misri) மற்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று

02ம் பக்கம்பார்க்க...

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 112 பேரின் உடல்கள் நல்லடக்கம்

### 44 குழந்தைகள் 33 பெண்கள் இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள்

இஸ்ரேலிய குண்டுவீச்சில் தரைமட்டமான கட்டிடங்களின் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 112 பேரின் உடல்கள், காசா நகரில் உள்ள "ஷேக் ஷாபான்" மயானத்தில் (04) செவ்வாய்க்கிழமை அடக்கம் செய்யப்பட்டது.

பாலஸ்தீன செய்தி நிறுவனமான "வஃபா" (Wafa) வெளியிட்டுள்ள செய்தியின்படி, அபூ ஷரீஆ அல்-ஹைனா என்ற குடும்பத்தைச் சேர்ந்த 112 பேரின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் பங்கேற்றனர். இவர்கள்

03ம் பக்கம்பார்க்க...

## திட்டமிட்டபடி உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு மனு தள்ளுபடி!

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த

04ம் பக்கம்பார்க்க...


## பாகிஸ்தான் தூதரக ஏற்பாட்டில் காஷ்மீர் சுரண்டல் எதிர்ப்பு தினம்

(அஷ்ரப் ஏ சமத்)



இந்திய ஆக்கிரமிப்பில் உள்ள ஜம்மு காஷ்மீர் மக்களுக்குத் தங்கள் வலுவான ஆதரவு தெரிவிக்கும் வகையில், பாகிஸ்தான்

03ம் பக்கம்பார்க்க...



## தமிழ்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

25 சதவீத மக்களை தமிழ் பேசும் மக்களின் அரசியல் பேரவை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அவர்களது உரிமைகள் மற்றும் நலன்கள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்காகவுமே இப்பேரவை அமைக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி பேசும் மக்களின் அரசியல் பேரவையின் பிரதிநிதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை (04) கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பேரவையின் நோக்கங்கள் குறித்து இந்திய உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் அண்மையில் ஜனாதிபதியுடனும் அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவருடனும் நடைபெற்ற சந்திப்புகளின் பெறுபேறுகளும் எடுத்துரைக்கப்பட்டன.

இலங்கையின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 25 சதவீத மக்களை இந்த அரசியல் பேரவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதையும் பேரவை சுட்டிக்காட்டியது.

மேலும், நீண்ட காலமாக தாமதிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துவதற்காக பேரவை மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து இந்திய உயர்ஸ்தானிகரின் கவனம் ஈர்க்கப்பட்டது.

இந்த விடயத்தில் இந்திய அரசு தொடர்ந்தும் தனது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும் என பேரவை நம்பிக்கை தெரிவித்தது.

## மத்திய..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மருத்துவ நிபுணர் ஹர்ஷ சுரங்க பெர்னாண்டோ, இன்று (05) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

உலக சுகாதார அமைப்பின் தடுப்பூசி தொடர்பான விசேட மருத்துவ நிபுணராக பல நாடுகளில் பணியாற்றியுள்ள அவர், கண்டி மாவட்ட சமூக மருத்துவ நிபுணராகவும் பணியாற்றியுள்ளார்.

## ஜனாதிபதி..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

(05) நடைபெற்றது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் வலுவான மற்றும் நீண்டகால உறவுகள் குறித்து நீண்ட கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

2022/2023 ஆம் ஆண்டுகளில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஆதரவு, டித்வா அனர்த்தத்தின் போது வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகள் மற்றும் உட்கட்டமைப்பு புனரமைப்புப் பணிகளில் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு, குறிப்பாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலுக்கு மத்தியில் நாட்டின் வலுசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்ய வழங்கப்பட்ட பங்களிப்பு ஆகியவற்றை நன்றியுடன் நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அதற்காக இந்திய அரசாங்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை முற்றாக ஒழிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் செயற்பாட்டுக்கு இந்தியாவின் ஆதரவு அவசியமெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பிராந்திய அச்சுறுத்தலாக மாறியுள்ள சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தால் முகங்கொடுக்க நேரிடும் சவால்களுக்குத் தீர்வு காண்பதில் பிராந்திய நாடுகள் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வகையில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டம் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர், போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு இந்தியாவின் முழுமையான ஆதரவை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், தொழில்நுட்பம், வலுசக்தி மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளுக்கு உட்பட்டு இரு நாடுகளுக்கு இடையே நிலவும் ஒத்துழைப்பை இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா (Santosh Jha), பிரதி உயர்ஸ்தானிகர் மைத்ரே குல்கர்னி (ஆயவசநல முரடமயசலெ) உள்ளிட்ட பிரதிநிதிகள், தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்..

## மிட்சிகன்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தோற்கடித்து வெற்றி பெற்றார்.

நவம்பரில் எல்-சயீத் வெற்றி பெற்றால், அவர் முதல் முஸ்லிம் அமெரிக்க செனட்டராக இருப்பார்.

அவரை விட அதிக அளவில் நிதி செலவிடப்பட்டது.

இந்தத் தேர்தலில் வெளியிலிருந்து வந்த நிதி 60 மில்லியன் டாலருக்கும் அதிகமாக இருந்ததாகக் கூறப்படுகிறது இதில் ஏஐபிஏசி (AIPAC) மற்றும் அதன் கூட்டணியில் உள்ள இஸ்ரேல் ஆதரவுக் குழுக்களே ஸ்டீவன்ஸின் மிகப்பெரிய ஆதரவாளர்களாக இருந்தன.

இந்த முடிவு, ஆளும் வர்க்கத்தின் பெரும் செலவினங்களுக்கு எதிராக முற்போக்குவாதிகளுக்குக் கிடைத்த ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

அப்துல் எல்-சயீதை சில அமெரிக்க ஊடகங்கள் புதிய ஒபாமாவாக வர்ணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது என்பதுடன் அமெரிக்க அரசியலில் முஸ்லிம்களின் செல்வாக்கு அதிகரிப்பதாக குறிப்பிட்டுள்ளன.

## மிட்சிகன்..

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மஹிந்த பத்திரண, உள்ளிட்டோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளது.

கம்மன்பில, விமல் உள்ளிட்ட சிலருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு - நீதிமன்றம் அதிரடி உத்தரவு! ; ஊழரசவ ளுநநமள ஊழவெநஅிவ ˆசழஉநநனபைள யுபயளைவ றுநைஅயட

குறித்த நபர்கள் பல்வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் நடத்திய ஊடக சந்திப்புகள் மற்றும் அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை ஆய்வு செய்த நீதவான், அவர்கள் ”வெளிப்படையாகவே நீதிமன்றத்தை அவமதித்துள்ளனர்” என குறிப்பிட்டுள்ளார்.


நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கே உள்ளதால், இது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் அங்கு சமர்ப்பிக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றப் பதிவாளருக்கு, நீதவான் பசன் அமரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தற்போது மூன்று பிரதான சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுரேஷ் சலே (முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர்), சரத் சமந்த (மட்டக்களப்பு புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி), ஜெக்கில் பாஸ் (தேசிய புலனாய்வுச் சேவையின் முன்னாள் அதிகாரி) ஆகியோர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உள்ளிட்ட பலருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, அவர்கள் மீதான விசாரணைகளும் தொடர்கின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில், விசாரணைகளைத் திசைதிருப்பும் வகையிலும் நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையிலும் கருத்து வெளியிட்டதாக கம்மன்பில, வீமல் வீரவன்ச, திலித் ஜயவீர உள்ளிட்ட குழுவினருக்கு எதிராக இந்த வழக்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# எம்.ஏ.சி.மஹ்சூம் முத்திரை மற்றும் முதல் நாள் தபால் உறை வெளியீடு






சர்வதேச மனித உரிமைகள் -க்ளோபல் மிஷன் சிறிலங்கா அமைப்பின் ஏற்பாட்டில் அமைப்பின் தவிசாளர் எம்.ஏ.சி. மஹ்சூம் அவர்களது சமூக சேவையையும், மனித நேய பணிகளை கௌரவிக்குமுகமாக முத்திரை, முதல் நாள் தபால் உறை வெளியீடு, வைத்தியசாலைகள், பள்ளிவாசல்கள், முதியோர் இல்லங்களுக்காக சக்கர நாற்காலிகள் வழங்கல், இது வரை சிறப்பான பங்களிப்பு செய்தமைக்கு அமைப்பின் பணிப்பாளர்கள், இணைப்பாளர் களை கௌரவித்தல், மற்றும் புதிய அங்கத்தவர்களுக்கான அமைப்பின் அடையாள அட்டை, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று பண்டாரநாயக்கா மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் அமீர்காண் தலைமையிலும், தவிசாளர் எம்.ஏ.சி. மஹ்சூம் முன்னிலையிலும் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி, திஸ்ஸ அத்தநாயக ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், முஸ்லிம் கவுன்சில் ஒப் சிறிலங்கா அமைப்பின் தலைவர் என்.எம்.அமீன், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன முன்னாள் பிரதிப் பணிப்பாளர் யூ.எல். யாகூப், தொழிலதிபர் ஏ.எச்.எம்.மாஹிர், சமூக சேவையாளர் சிராஷ் யூனுஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், தெஹிவளை, கல்கிஸை மாநகர முன்னாள் உறுப்பினர் செரீனா முஸ்தபா, ஐனா மெடிக்கல் கெம்பஸ் தலைவி நிமாஷா முனாப் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்த இந்த நிகழ்வினை அமைப்பின் பணிப்பாளர்களான இர்ஷாத் ஏ காதர், சிபான், ஸிரீன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

எம்.ஏ.சி. மஹ்ஜூம் அவர்கள் உதயம் பத்திரிகையின் பணிப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

## ஒரே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் ஏற்கனவே கொல்லப்பட்டு, சமீபத்தில்தான் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டவர்கள் ஆவர்.

காசா நகரின் மையப்பகுதியில் உள்ள "ஷேக் ஷாபான்" மயானத்தில் பெரும் துயரத்துடனும், ஆக்கிரமிப்புப் படைகளின் குற்றங்களுக்கு எதிரான கண்டனத்துடனும் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. இவ்வாறு அடக்கம் செய்யப்பட்டவர்களில் 44 குழந்தைகள், 37 பெண்கள், 23 முதியவர்கள் மற்றும் 7 மாற்றுத்திறனாளிகள் அடங்குவர்.

---

## பாகிஸ்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ஸ்தானிகர் ஆலயம் இன்று 05.புதன்கிழமை , தூதரக பிரதிநிதிகள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பாகிஸ்தான் சமூகத்தினருடன் இணைந்து காஷ்மீர் சுரண்டல் எதிர்ப்பு தினத்தினை தூதரக முன்றலில் நடாத்தியது.

இந் நிகழ்வில் (காஷ்மீர் சுரண்டல் எதிர்ப்பு தினம்) நிகழ்வை நினைவு கூர்ந்தது. 2019 ஆகஸ்ட் 5 அன்று, இந்தியப் படைகள் அப்பகுதியை முற்றுகையிட்டு, அனைத்து தொடர்புகளையும் துண்டித்து, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அதன் சர்ச்சைக்குரிய நிலையையும் மக்கள்

தொகை அமைப்பையும் மாற்றுவதற்காக மேற்கொண்ட சட்டவிரோத நடவடிக்கைகள் 7ஆண்டு நிறைவு இந்த நிகழ்வில் நினைவுகூரப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கலாநிதி நய்யார் நசீர்,

காஷ்மீர் மக்கள் கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக உங்கள் சுயநிர்ணய உரிமைக்காக போராடி வருவதை வலியுறுத்தினார். அங்கு இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், ராணுவ முற்றுகை மற்றும் அடக்குமுறைகளை அவர் கடுமையாக கண்டித்ததோடு, ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்திற்கு அமைய உலகத் தலைவர்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய திரு. சிராஸ் யூனுஸ்,


இந்தியா தனது சர்வதேச வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதால், ஐ.நா பாதுகாப்புச் சபையில் தீர்க்கப்படாத பழமையான பிரச்சனைகளில் ஒன்றாக காஷ்மீர் உள்ளதாகக் குறிப்பிட்டார். பாகிஸ்தான் அதிபர் ஆசிஃப் அலி

சர்தாரி மற்றும் பிரதமர் முஹம்மது ஷாபாஸ் ஷெரீப் ஆகியோரின் சிறப்புச் செய்திகள் இங்கு வாசிக்கப்பட்டன. காஷ்மீர் மக்களுக்கு அமைதியான முறையில் தீர்வு கிடைக்கும் வரை பாகிஸ்தான் ஆதரவு தொடரும் என அச்செய்திகள் உறுதி அளிக்கப்பட்டது.

முடிவில், வன்முறைகளை உடனடியாக நிறுத்தி, அடக்குமுறைச் சட்டங்களை விலக்கிக்கொண்டு காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்குமாறு இந்திய அரசை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரகம் கேட்டுக்கொண்டது. அத்துடன், காஷ்மீர் மக்களுக்கு அமைதியான

எதிர்காலம் கிடைக்கும் வரை அவர்களது உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம்

எனப் பாகிஸ்தான் மீண்டும் உறுதி பூண்டது.



www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 AUGUST 06 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# நீதிபதிகளின் ஓய்வு வயது நீடிப்பு விவகாரம், நீதித்துறையின் சுயாதீனத்திற்கு மறைமுகமான அழுத்தமாக மாறக்கூடாது

இலங்கையில் உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயதை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவு அரசியல், சட்ட மற்றும் சமூக மட்டங்களில் பரவலான விவாதத்தை உருவாக்கியுள்ளது. அரசாங்கம் இதனை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைத்து, அனுபவமிக்க நீதிபதிகளை நீண்ட காலம் சேவையில் வைத்திருப்பதற்கான முயற்சியாக விளக்குகிறது.

இந்த முன்மொழிவு நீதித்துறையின் செயற்றிறனை மேம்படுத்தும் பரந்த மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தரப்பு குறிப்பிடுகிறது.

ஆனால் மறுபுறம், எதிர் கட்சிகள், வழக்கறிஞர் அமைப்புகள் மற்றும் அரசியலமைப்பு நிபுணர்கள், இந்த விடயம் நீதித்துறையின் சுயாதீனத்தைக் கேள்விக்குறியாக மாற்றும் என்று எச்சரிக்கின்றனர். அவர்கள் கருத்துப்படி, நீதிபதிகளின் பதவிக்காலம் நீடிப்பு தொடர்பான மாற்றங்கள் வெளிப்படைத்தன்மையுடனும், அனைத்து தரப்பினரையும் உள்வாங்கி விரிவான ஆலோசனைகளுடனும் மேற்கொள்ளப்பட வேண்டும் இல்லையெனில் நீதித்துறை சுயாதீனம் தொடர்பான பொதுமக்களின் நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்படும் எனக் கூறுகின்றனர்.

எனினும் இந்த சேவை நீடிப்பு தொடர்பான நகர்வின் மூலமாக பின்வரும்

நன்மைகள் கிடைக்குமென அரசு தரப்பு வாதிடுகின்றது. அனுபவமிக்க நீதிபதிகளின் அறிவும் திறமையும் நீண்ட காலம் நீதித்துறைக்கு கிடைத்தல், சுமார் 11 இலட்சம் நிலுவையில் உள்ள வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்துதல்,

புதிய நீதிபதிகளை நியமிக்கும் இடைவெளிகளில் ஏற்படும் நிர்வாகச் சவால்கள் குறைதல்.

எனினும், இந்த நகர்வினை எதிர்ப்பவர்களின் வாதங்களின் படி நீதித்துறையின் சுயாதீனம் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் கருதினால், நீதிமன்றங்களின் மீதான நம்பிக்கை குறையலாம். கீழ்நிலை நீதித்துறை அதிகாரிகளின் பதவி உயர்வு வாய்ப்புகள் தாமதமாகலாம்.

அரசியலமைப்புச்சட்டத்தில்இத்தகையமாற்றங்கள்செய்யப்படும் போது, அனைத்து தரப்பினர்களுடனும் ஆலோசனை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையானது நியாயமானதே.

நீதித்துறையின் வலிமை என்பது நீதிபதிகளின் அனுபவத்தில் மட்டுமல்ல் அதன் சுயாதீனம் வெளிப்படைத்தன்மை, மற்றும் மக்களின் நம்பிக்கை ஆகியவற்றிலும் இருக்கிறது. ஓய்வு வயதை உயர்த்துவது நல்ல நோக்கத்துடன் செய்யப்பட்ட சீர்திருத்தமாக இருந்தாலும், அது அரசியல் சர்ச்சைக்கு இடமளிக்காமல், பரந்த ஆலோசனை, அரசியலமைப்புச் சட்டக் கோட்பாடுகள் மற்றும் தேசிய ஒற்றுமையை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டில் நீதித்துறை சுதந்திரம் என்பது நீதிபதிகளுக்கான உரிமை மட்டுமல்ல. அது ஒவ்வொரு குடிமகனின் நீதியின்மீது உள்ள நம்பிக்கையைப் பாதுகாக்கும் அடித்தளமாகும்.

இவற்றை கருத்துக் கொண்டு அரசாங்கம் செயற்படுவது வீணான சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.



இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி அவர்கள் கொழும்புக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் மத்தியில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை இன்று சந்தித்தார். இரு தரப்புக்கும் இடையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, பிரதானமாக பிராந்திய அபிவிருத்தி மற்றும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலவும் நீண்டகால விசேட உறவை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், இரு நாடுகளின் பரஸ்பர நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் பிராந்திய ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கும் தொடர்ச்சியான தொடர்புகளும் நெருங்கிய ஒத்துழைப்பும் அவசியமானது என்பதை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம், அபிவிருத்தி ஒத்துழைப்புகள் மற்றும் மக்களுக்கிடையேயான தொடர்புகள் உள்ளிட்ட பரந்த அளவிலான துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.



கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி,இன்று(5), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்,பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போது, இலங்கை மக்களின் நலனை மேம்படுத்தும் நோக்கில் இந்தியா முன்னெடுத்து வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவையும், மக்கள் நலனை மையமாகக் கொண்ட. சமூகம் சார்ந்த நடவடிக்கைகளையும் தொடர்ந்து வலுப்படுத்துவது தொடர்பாகவும் பயனுள்ள கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.




## திட்டமிட்டபடி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை உரிமை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாது உச்ச நீதிமன்றம் நேற்று (5) தள்ளுபடி செய்தது.

முதல் மற்றும் இரண்டாம் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த ஐந்து மாணவர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

# அம்பாறை கரும்பு செய்கையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை

## பாராளுமன்ற ஆலோசனைக்கூட்டத்தில் அமைச்சர் ஹந்துன்நெத்தி பணிப்பு

அம்பாறை மாவட்ட கரும்புச் செய்கையாளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில் ஹிங்குராணை சீனி கம்பனி நிர்வாகத்திற்கும் மாவட்ட கரும்பு செய்கையாளர்களுக்குமென விஷேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுமாறு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அமைச்சரின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி தலைமையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற போது அம்பாறை மாவட்ட கரும்புச் செய்கையாளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளையும் அப்பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவும் திகாமடுல்ல மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமா லெப்பையும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். அதனைத் தொடர்ந்தே அமைச்சர் மேற்படி கூட்டத்திற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு செயலாளர் திலகா ஜயசுந்தரவுக்கு ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய உதுமா லெப்பை எம்,பி, அம்பாறை மாவட்ட கரும்பு செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கடந்த ஆட்சிக் காலங்களில் முன்னாள் அமைச்சர்கள் பலரிடம் எடுத்துக் கூறிய போதிலும் பாதிக்கப்பட்ட கரும்புச் செய்கையாளர்களுக்கு எவ்வித நியாயமும் கிடைக்கவில்லை. தற்போதைய அரசாங்கத்தின் பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸவும் நானும் அம்பாறை மாவட்ட கரும்பு செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உங்களது கவனத்திற்கு கொண்டு வந்ததற்கு அமைய நீங்கள் நேரில் வருகை தந்து விஷேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினை ஏற்பாடு செய்து கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் உண்மையான தன்மையினை அறிந்து அதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான திட்டங்களை முன்வைத்தீர்கள். அதற்காக எமது மாவட்ட கரும்புச் செய்கையாளர்கள் சார்பில் விஷேட நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அண்மையில் எமது மாவட்டத்திற்கு வருகை தந்த நடத்திய மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தின் போதும், இம்மாவட்ட கரும்பு செய்கையாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். அதற்கமைய ஜனாதிபதி, ஹிங்குராணை சீனிக் கூட்டுத்தாபன கம்பனியின் பணிப்பாளரிடம் கரும்பு





செய்கையாளர்கள் இலாபம் அடையக் கூடிய வகையில் ஹிங்குராணை சீனிக் கூட்டுத்தாபன கம்பனி செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென ஆலோசனை வழங்கியதோடு அம்பாறை மாவட்ட கரும்புச் செய்கையாளர்களுக்கும் ஹிங்குராணை சீனிக் கம்பனிக்கும் இடையில் விஷேட கூட்டமொன்றை நடாத்தி புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்ய வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப் பட்டும் இதுவரையும் இக்கூட்டம் நடாத்திருப்பதாகவும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்தே அமைச்சர் ஹந்துன்நெத்தி மேற்படி கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கினார் என்று பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கூறினார்.

## 2027 ஆம் ஆண்டுக்கான ஞாபகார்த்த முத்திரைகள் வெளியீடு: ஆலோசனைகளைக் கோருகிறது அஞ்சல் திணைக்களம்

**2027** ஆம் ஆண்டுக்கான ஞாபகார்த்த முத்திரைகள் வெளியீடு: ஆலோசனைகளைக் கோருகிறது அஞ்சல் திணைக்களம்

**2027** ஆம் ஆண்டில் வெளியிடப் படவுள்ள ஞாபகார்த்த முத்திரைகளுக்கான பொருத்தமான தலைப்புகள் மற்றும் ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை அஞ்சல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

முத்திரைக் கொள்கையின் 7.1 ஆம் பந்தியின் பிரகாரம் அஞ்சல் அதிபதி எஸ். ஆர். டபிள்யு. எம். ஆர். பி. சத்குமார அவர்களினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முக்கிய விவரங்கள்:

ஆலோசனைக்கான தலைப்புகள்: தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள், ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள், மதிப்பிற்குரிய நபர்கள், இயற்கைக் காட்சிகள், விளையாட்டு மற்றும் தேசிய பெருமையையும் கலாசார விழுமியங்களையும் வெளிப்படுத்தும் தலைப்புகளின் கீழ் ஆலோசனைகளை அனுப்ப முடியும்.

சமர்ப்பிக்க வேண்டியவை: பரிந்துரைக்கப்படும் ஆலோசனையுடன் அதன் முக்கியத்துவம் குறித்த சுருக்கமான விளக்கம், திகதிகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூலமான சான்றுகள், மற்றும் அனுப்புபவரின் பெயர், முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, கையொப்பம் ஆகியவை இணைக்கப்பட வேண்டும்.




கடைசித் திகதி: அனைத்து ஆலோசனைகளும் 2026 செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி: பணிப்பாளர், முத்திரைப் பணியகம், அஞ்சல் தலைமையகம், இல. 310, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 01000.

குறிப்பிட்ட இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் ஆலோசனைகள் 2027 ஆம் ஆண்டுக்கான முத்திரை வெளியீட்டின் போது கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது எனவும் அஞ்சல் திணைக்களம் தெரிவிப்பதாக அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.





கத்தார் நாட்டின் முன்னாள் அமீர் அதிமேதகு ஷேக் ஹமாத் பின் கலீஃபா அல் தானி அவர்களின் மறைவையொட்டி, இலங்கைக்கான கத்தார் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள இரங்கல் புத்தகத்தில், சமூக நீதிக் கட்சியின் தலைவரும் தெஹிவளை - கல்கிஸ்ஸை மாநகர சபை உறுப்பினருமான அர்க்கம் முனீர் மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளர் இர்பான் பன்னா ஆகியோர் சமூக நீதிக் கட்சியின் சார்பில் தமது ஆழ்ந்த இரங்கல்களைப் பதிவு செய்தனர்.

## சிறப்பாக நடைபெற்ற Rich Curly Academy பட்டமளிப்பு விழா







**(அஷ்ரப் ஏ சமத்)**

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் RiCH Curly Academy ஏற்பாடு செய்திருந்த Grand Graduation Ceremony 2026 நிகழ்வு லெவன்டர் அரங்கத்தில் 01.08.2026 வெகுசிறப்பாக நடைபெற்றது.

RiCH Curly Academy நிறுவனரும் பணிப்பாளருமான திருமதி ரிஸ்னா அஸ்லம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஹாஷிம் உமர் பவுண்டேஷனின் ஸ்தாபகர் புரவலர் ஹாசிம் உமர் மற்றும் அவரது பாரியார் திருமதி மரியம் ஹாஷிம் உமர் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

Hassim Omar & Hassim Omar - ஹாசிம் உமர் நிகழ்வுக்கு வருகை தந்த பிரதம அதிதிகள் பாரம்பரிய நடனமான கண்டிய நடனத்துடன் அழைத்து வரப்பட்டு மலர் கொத்து வழங்கி வரவேற்கப்பட்டனர்.

வரவேற்புரையோடு நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வின் போது ஹென்னா வடிவமைப்பு, கேக் தயாரித்தல் மற்றும் அலங்காரம், மிக்ஸாலஜி உள்ளிட்ட துறைகளில் பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை நிகழ்வின் பிரதம விருந்தினர்களான ஹாஷிம் உமர் பவுண்டேஷனின் ஸ்தாபகர் புரவலர் ஹாசிம் உமர் அவர்களும் அவரது பாரியார் மரியம் ஹாஷிம் உமர் அவர்களும் வழங்கி வைத்தார்கள்

அதேபோன்று பல்வேறு போட்டிகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்களால் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்வி, தொழில் முனைவு, அழகுக்கலை மற்றும் சமூக சேவைத் துறைகளில் பங்களிப்பு வழங்கி வரும் சிறப்பு அதிதிகள் மற்றும் ஊடகப் பங்காளர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் மற்றும் பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

சிறப்பு விருந்தினர்களாக டுலைய உசயகவ நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.பி.எம் லுஃப்னாஸ், AR Clothing நிறுவனத்தின் உரிமையாளர் பாத்திமா ஃபஸ்னா, Fazmina Bridal & Academy நிறுவனத்தின் உரிமையாளர் பாத்திமா ஃபஸ்மினா ரிஸான், பாத்திமா ஷாரா பரீட் (Sha Collection), உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையும் நீதித்துறை சுதந்திரமும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்



நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாத்து உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். சுயாதீனமாக இயங்கக்கூடிய நீதித்துறையில் எந்த விதத்திலும் தலையீடு செய்வது ஜனநாயக மரபாக அமைவதில்லை.

அதனால் நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிப்பது தொடர்பான அரசியலமைப்பு திருத்தம் பொறுத்தமற்றதாகும் என்று சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடும் சந்திப்பொன்று 2026.07.23 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் அவரது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பிற்கான ஏற்பாட்டை சஜித் பிரேமதாச ஏற்பாடு செய்திருந்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சர்ச்சைகள் தொடரும் நிலையில் இந்த நீதித்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது என்ற விடயம் முன்னிலைப்படுத்தி பேசப்பட்டு வருகின்றது. நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதற்காக அரசாங்கம் அரசியலமைப்பின் நீதிபதிகளின் வயதெல்லை தொடர்பான பிரிவிற்கு திருத்தம் ஒன்றை சமர்ப்பிக்க உத்தேசித்து வருவது தொடர்பாகவே இந்த குழப்ப நிலை ஏற்பட்டிருக்கின்றது. பிரதம நீதியரசர் ஓய்வு பெறும் வயதை அடைந்திருப்பதால் உரிய வயதில் அவர் ஓய்வு பெற்றால் அந்த வெற்றிடத்திற்காக உயர் அந்தஸ்த்தில் இருக்கக்கூடிய 06 இற்கும் மேற்பட்ட நீதியரசர்களில் இருந்து ஒருவர் தெரிவாகலாம். இவ்வாறு பதவியில் இருப்பவரை ஓய்வு பெறும் வயதில் ஓய்வு பெற அனுப்பாமல் வயதெல்லையை நீடிப்பதால் ஏனையவர்களுக்கு கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் அற்றுப் போகின்றது. இது அநீதியாகும் என்ற அடிப்படையில் இந்த விடயத்தை நீதித்துறை சார்ந்தவர்கள் கண்டித்து வருகி ன்றனர்.

அந்த வரிசையில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கின்ற சில அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் சஜித் பிரேமதாச தலைமையில் கூடி இது தொடர்பாக கலந்துரையாடி இருக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாமல் ராஜபக்ஷ, சம்பிக ரணவக, விமல் வீரவன்ச, திஸ்ஸ அத்தநாயக்க உட்பட பல முன்னாள் அரசியல்வாதிகளும் இந்த சந்திப்பில் பங்குபற்றி ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தி இருக்கின்றனர். பாராளுமன்றத்தில் அரசு கொண்டு வருகின்ற ஏதாவதொரு அரசியலமைப்பு திருத்தம் அல்லது அரசியல் அமைப்போடு சம்பந்தப்பட்ட விடயங்கள் அரசியல் அமைப்பிற்கு முரணானதா ? என்று பரிசீலனை செய்து அதன் கருத்தை தெரிவிக்குமாறு உயர்நீதிமன்றத்திடமே சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாகவும் எதிர்க்கட்சிகள் கூட்டாக ஆட்சேபனை தெரிவிக்கும் மனுவொன்றை உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க திட்டமிட்டு வருகின்றன. ஆனாலும் அதே உயர் நீதிமன்ற நீதியரசரின் ஓய்வுபெறும் வயதெல்லை நீடிப்புக்கு எதிரான மனுவாக இருப்பதால் நீதியான தீர்ப்பு வழங்கப்படுமா? என்று நாமல் ராஜபக்ஷ, சஜித் பிரேமதாச, விமல் வீரவன்ச, சம்பிக ரணவக, திஸ்ஸ அத்தநாயக்க உட்பட இந்த சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் அரசியல்வாதிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், நாட்டில் 11 இலட்சம் வழக்குகள் விசாரணை செய்யப்பட வேண்டி நீதிமன்றங்களில் தேக்கம் அடைந்துள்ளன. அந்த வழக்குகளின் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அதற்காக எவ்வாறு நீதித்துறையை பயன்படுத்தலாம் என்று ஒரு திட்டத்தை வகுப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக்கு முவொன்றை நியமிக்குமாறு கோரும் வேண்டுகோள் ஒன்றை முன்வைக்க எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் கூடிய கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கோரிக்கை விடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன் சிறைச்சாலைகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளன. 11,000 பேருக்கு இருக்கின்ற இடவசதியில் 45,000 கைதிகள் உள்ளனர். அதனால் மோதல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இந்த நெருக்கடிக்கு காரணம் கைதிகளில் அதிகமானவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகியும் விற்பனையில் ஈடுபட்டும் கைது செய்யப்பட்டவர்களாவர். அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளை பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நீண்ட காலம் செல்வதால் சிறைக் கூடங்கள் நிரம்பி வழிகின்றன. அதனால் பகுப்பாய்வு நடவடிக்கைகளையும் துரிதப்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளும் முன்வைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் நீதித்துறை அரசினதோ அல்லது வேறும் எந்தவிதமான நிறுவனங்களினதோ தலையீடுகள் இன்றி சுதந்திரமாக இயங்க வேண்டும். அப்போதே நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடக்கின்றது என்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கும். மக்கள் நீதித்துறையில் வைத்திருக்கின்ற நம்பிக்கை சிதைவடையாமல் பாதுகாப்பாக இருக்கும். அரசு தனது குறுகிய தேவைகளுக்கு ஏற்ப சட்டங்களில் திருத்தங்களை செய்வதன் மூலம் நீதித்துறையில் கையடிக்கு நிலை ஒருநாட்டில் இருக்குமானால் அங்கே ஜனநாயகம் கேள்விக்குறியானதாக மாறிவிடுகின்றது.

நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை அரசு நீடிக்க முயற்சி செய்வதன் காரணம் ஏற்கனவே கிடப்பில் இருந்து தூசு தட்டி எடுக்கப்பட்டுள்ள சில வழக்குகளின் விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதால் நீதியரசர்கள் மாறுகின்ற போது அத்தகைய விசாரணைகள் திசைமாறலாம் என்ற எதிர்பாப்பிலாகும்.

இதில் முக்கியமான வழக்கு விசாரணையாக அமைந்திருப்பது உயிர்த்தஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதல் வழக்காகும். இந்த வழக்கு விசாரணையோடு சம்பந்தப்பட்டுள்ள சுரேஷ் சலே உட்பட பலர் உள்ளே இருக்கின்றனர். தற்போது தொடரும் விசாரணைகள், புதிய கைதுகள் ஒருவகையில் அதனோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு மரண அச்சுறத்தலை ஏற்படுத்தி வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ காலத்தில் இந்த வழக்கு விசாரணைகள் நடைபெற்ற போது சாட்சியங்கள் திசைமாற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எப்படியோ தற்கொலை குண்டு தாக்குதலின் உண்மையான பின்னணி நோக்கம், அதனோடு சம்பந்தப்பட்ட சூத்திரதாரிகள் சிக்காமல் இருப்பதற்கான மறைமுக முயற்சிகள், சாட்சியங்கள், தடையங்களை அழித்தல் என்று பல விடயங்கள் நடந்திருக்கின்றன.

அதனால் இத்தகைய விசாரணைகள் ஒரே நீதிபதி அல்லது நீதிபதிகள் குழாமின் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டால் வரக்கூடிய தீர்ப்பு நீதி நியாயமாகதாக அமையலாம். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ காலத்தில் அவ்வாறு நடக்கவில்லை என்பது ஊர்ஜிதமாகி இருக்கின்றது.

அத்துடன் முன்னைய ஆட்சி காலப்பகுதியில் ஊழல், மோசடிகள், அரச நிதி துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட வர்களுக்கு எதிரான பல வழக்குகளும் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வழக்குகளால் பல அரசியல்வாதிகள் சிக்கும் நிலை உருவாகி இருக்கின்றது.

அதனால் தற்போது நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பாக குரல் எழுப்பக்கூடிய பலருக்கு இந்த விசாரணைகள் பாரிய சவாலாக அமைந்திரு க்கின்றது.

அதிலும் ராஜபக்ஷ குடும்பம் சட்டத்தால் பாதிக்கப்படலாம் என்ற அச்ச நிலை நாட்டில் காணப்படுகின்றது.

நாட்டில் நீதித்துறை சுதந்திரம் பாதுகாப்பட வேண்டும் என்பதில் இருவேறுபட்ட கருத்து இருக்க முடியாது. நீதித்துறைக்கு அரசியல் தலையீடு அல்லது அச்சுறுத்தல் ஏற்படுமானால் அதனைத் தடுக்க அரசியல், கட்சி பேதங்களுக்கு அப்பால் இருந்து அனைவரும் குரல் எழுப்ப வேண்டும். பாரபட்சமான தீர்ப்புக்கள் வழங்கப்படுமானால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் மக்களே.

ஆனாலும் தொடரும் வழக்கு விசாரணைகள் எந்தவிதமான இடையூறுகளும் இல்லாமல் சுயாதீனமான முறையில் முன்னெடுப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.

அதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க வேண்டும். இந்நிலையில் தற்போது பதவியில் இருக்கின்ற அரசாங்கத்தின் பலம் 159 ஆசனங்களாக இருக்கின்றது.

மூன்றில் இரண்டு பலம் கையில் இருக்கின்ற நிலையில் எந்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தாலும் அதனை நிறைவேற்றிக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. அது நீதித்துறையில் தலையீடு செய்யும் சட்டமூலமாக இருந்தாலும் சரி. அல்லது நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாட்டை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தும் சட்டமூலமாக இருந்தாலும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒருபோதும் எதிராக வாக்களிக்க முன்வரமாட்டார்கள்.

இதே நிலைதான மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலும் அரசியலமைப்பு திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட காலப்பகுதியிலும் நடைபெற்றது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இந்நிலையில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக 2026.07.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகளால் நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டது. அந்தப் பிரேரணை ஆளும் கட்சியால் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 36 பேர் வாக்களித்தனர். பிரேரணைக்கு எதிராக ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் 152 உறுப்பினர்கள் வாக்களித்ததால் பிரேரணை 116 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் பலம் 66 ஆக இருக்கின்ற நிலையில், இதுபோன்ற நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை வெற்றிகொள்ள முடியாது என்று அறிந்திருந்தும் சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் போக்கிற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்திருக்கலாம் என்று கருத முடிகிறது.

ஏப்படியானாலும். சுதந்திர மானதும் நியானமானதுமான நீதித்துறையில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள், சட்டமா அதிபர், மற்றும் கீழ் நீதிமன்றங்களின் நீதியரசர் உட்பட நீதித்துறையோடு சம்பந்தப்பட்ட அனைவரி னதும் பொறுப்பும் கடமையும் பாரியதாகும்.

அதனால் பாராளுமன்றத்தில் அரசுக்கு இருக்கின்ற பலம் அரசியல் அராஜக நிலை ஏற்பட அல்லது அதிகார துஷ்பிரயோ கத்திற்கு வழிவகுக்க கூடாது. இந்த விடயத்தில் மக்களும் விழிப்பாக நடந்துகொள்ள வேண்டும்.



# குருநாகல் மல்லவப்பிட்டிய 14 வயதுச் சிறுமி மெஹ்னாஸ் றியாஸ் 400 பக்க புலனாய்வு ஆங்கில நாவல் வெளியீட்டு சாதனை!

**ஆளுநர் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள் பிராந்திய மக்கள் எனப் பலரும் பாராட்டு**

( ஐ. ஏ. காதிர் கான் )

“இந்நாட்டின் கல்விச் சீர்த்திருத்திற்கு அமைவாக மாணவர்களிடையே புத்தாக்க எழுச்சி தற்போது மேலோங்கி வருகின்றது. அந்த வகையில், மெஹ்னாஸ் றியாஸ் எழுதிய 'wanished without a trace' ஆங்கில நாவல் நூல் மிக முக்கியத்துவம் பெறுகின்றது” என்று வடமேல் மாகாண ஆளுநர் புகழாரம் சூட்டினார்.

“ஊடகவியலாளர்களும் எழுத்தாளர்களும், இந்நாட்டின் அபிவிருத்திற்கு என்றும் வளம் சேர்ப்பவர்கள்” என்று, குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.எம். அஸ்லம் குறிப்பிட்டார்.

'இலங்கை தமிழோசை ஊடக வலையமைப்பு' ஏற்பாட்டில், 14 வயது மாணவி மெஹ்னாஸ் றியாஸ் எழுதிய “வாணிஸெட் வித்தவுத் அ ரேஷ்” என்னும் 400 பக்க புலனாய்வு ஆங்கில நாவல் நூல் வெளியீட்டு விழாவின் போதே, இவர்கள் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.





வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூட மண்டபத்தில் வெகு சிறப்புற நடந்தேறிய இந்நிகழ்வில், நமது இளைய சமூகத்தினரின் வாழ்வியல் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இளம் திரைப்பட இயக்குநர் டி.கே. யுவன் இயக்கத்தில் உருவான இலங்கை தமிழ்த் திரைப்படமான “த பைனல் எஸ்கெப்” என்னும் புதிய திரைப்பட வெளியீட்டு விழா, மூத்த இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு என்பனவும் விமர்சையாக இடம்பெற்றன.

'இலங்கை தமிழோசை ஊடக வலையமைப்பு' இயக்குநர் அப்துல் மஜீத் ஜெனீம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வடமேல் மகாண ஆளுநர் திஸ்ஸ குமாரஶ்ரீ வர்ணசூரிய, கௌரவ அதிதியாக தேசிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.எம். அஸ்லம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விசேட சிறப்பு விருந்தினராக, 'சுயாதீன தொலைக்காட்சி சேவை' யின் 'வசந்தம் தொலைக்காட்சி' மற்றும் 'வசந்தம் எப்.எம்.' செய்தி முகாமையாளர் எம்.எஸ். இர்பான் முஹமட் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, குருநாகல் மாவட்டத்தில் தேசிய ஊடகங்களில் மிக நீண்டகாலமாகப் பணியாற்றி வருகின்ற மூத்த இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் ஆறு பேர் விருதுகள் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

சரத் யட்டவர, இக்பால் அலி, டி.எம். ஜனூர் சிச்சிலான், எம். சமன்குமார, என்.எம். ரவீந்திர பிரபாத், சாந்தனி திசாநாயக்க ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில், நூல் பற்றிய ஆய்வுரையினை, 'லைசியம்' சர்வதேச பாடசாலையின் அதிபர் சந்தன பஸ்நாயக்க நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை, சமூக சேவையாளர் அல் - ஜாமிஉல் அக்பர் ஜும்ஆப் பள்ளிவாசல் உப தலைவர் ஏ.ஆர்.எம். பாரிஸ் பெற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, சமயத் தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவ மாணவிகள், வர்த்தகப் பிரமுகர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# பலாலி விமான நிலையத்தின் பாரிய அபிவிருத்திப் பணிகளை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேரில் ஆய்வு

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாரிய அபிவிருத்திப் பணிகளை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் நேரில் பார்வையிட்டு, பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

வட மாகாணத்தின் விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்திற்கு ஏற்ப மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் நேரடியாக ஆய்வு மேற்கொண்டார்.

இதன்போது, பயணிகள் புறப்பாடு மற்றும் வருகைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டங்கள், புதிய கட்டிட வசதிகள், பாதுகாப்பு மற்றும் சேவை வசதிகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளிடமிருந்து விரிவான விளக்கங்களை பெற்றுக்கொண்டார்.

அதேவேளை, திட்டமிட்ட காலக் கெடுவிற்குள் பணிகளை நிறைவு செய்வதன் அவசியத்தையும், எதிர் காலத்தில் அதிகளவிலான உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகளை கையாளக்கூடிய வகையில் அனைத்து



வசதிகளும் உயர்தரத்தில் அமைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் வலியுறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

பலாலி விமான நிலையத்தை விரிவுபடுத்தி, வடக்கு மக்களுக்கும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் சிறந்த விமானப் போக்குவரத்து சேவையை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வந்தது.

அந்தக் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு, புதிய அரசாங்கத்தின் முன்னுரிமை அபிவிருத்தித் திட்டங்களின் ஒரு பகுதியாக விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவடைந்ததன் பின்னர், வட மாகாணத்தின் சுற்றுலாத்துறை, முதலீட்டு வாய்ப்புகள், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி மேலும் வலுப்பெறுவதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச பயணிகளுக்கான சேவைகளும் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

க.கிஷாந்தன்
ஊடக செயலாளர்
கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு



திருச்சியில்,இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அவர்களின் இல்லத்திற்கு வெள்ளிக்கிழமை(31) மாலை வருகைதந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அன்னாரை மரியாதை நிமித்தமாக சந்தித்து,தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து கலந்துரையாடினார். சிரேஷ்ட ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது உடனிருந்தார்.

# மானம்பொடையில் சிரமதான பணிகள்



(உக்குவள ஜலீல்)

டெங்கு ஒழிப்பு வார்த்தை முன்னிட்டு க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்திற்கமைய உக்குவளை பிரதேச சபை மானாம்பொட ஜும்ஆ பள்ளி நிர்வாகம் ஜனாஸா நலன்புரி சங்கம் ஆகியன இனைந்து மானாம்பொட பிரதான பாதை யோரங்கள் சுற்றுப் பகுதிகள் பங்களா வீதி அதனுடனான வடிகான் பகுதிகள் ஆகிய பகுதிகள் சிரமதானமூலமாக பெகோ இயந்திரங்களை உபயோகித்து துப்புரவு செய்யப்பட்டன இப்பணிகளின்போது மாத்தளை பொலிஸ் மற்றும் இராணுவ சேவையினர் உக்குவளை பீரதேச



சபையின் தலைவர் உதவித் தலைவர் சுகாதார மற்றும் சுற்றாடல் பாதுகாப்பதிகாரி உட்பட சமூகசேவை சங்கங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இறக்காமத்தில் டெங்கு ஒழிப்பு பணிகள்



(கே எ ஹமிட்)


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர், சட்ட முதுமானி பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் டெங்கு நோயற்ற ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் “கிழக்கு மாகாண டெங்கு ஒழிப்பு செயற்திட்டம்” இன்று 01ம் திகதி இறக்காமம் பிரதேசத்தில் நடைபெற்றது .

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.அப்துல் வாஸித், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் கட்சியின் பிரதி தலைவருமான பைசால் காசிம்,கட்சியின் தேசிய இளைஞர் அமைப்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பொத்துவில் பிரதேச சபை தவிசாளருமான முஷர்ரப் முதுநபின், கட்சியின் அம்பாறை மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் எம். முஸ்மி, அட்டாளைச் சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ், உயர்பீட உறுப்பினர் றியாஸ் (Tr), இறக்காமம் பிரதேச சபை உறுப்பினர்களான எம்.என்.நாசர், எஸ்.எல்.எம்.றஜா, என்.எம்.ஆஷிக் , முன்னாள் இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் எம்.ஐ.நைசர், எம்.ஆர்.எம்.நுஸ்கி (IRFC), தொழிலதிபர் ஏ.கே.அமீர் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# அமெரிக்கா VS ஈரான்

# உலகப் போராக மாறும் அபாயம்





எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)

அமெரிக்கா மற்றும் ஈரான் இரண்டு நாடுகளுக்கு இடையிலான மோதல் தற்போது சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில் நிலை மோசமடைந்து வருவதைக் காணலாம்.

தற்போதைய நிலையில் ஈரான் ஆதரவு நாடுகள் மற்றும் அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் இடையேயான இரண்டு பிரிவாக மாறி விட்ட நிலையில் உலகப் போராக மாறி விடும் அபாயம் இருப்பதை எந்தவொரு நிலையிலும் மறுக்க முடியாத கடும் போக்கு வாத சூழல் காணப்படுகிறது.

இதற்கிடையே ஈரானுக்கு ரஷ்யா மற்றும் சீனா திரைமறைவில் செயல்பட்டு வருகிறது. இருவரும் ஆதரவு கொடுத்தால் மிகவும் சிரமத்தை சந்திக்க வேண்டும் என்று அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறினார்.அமெரிக்காவுக்கு ஆதரவாக செயல்படும் பிரித்தானிய வை மிக கடுமையாக கண்டித்து ஈரான், அமெரிக்கா தங்கள் நாட்டின் பொதுமக்கள் தாக்கி அழிக்கும் வகையில் செயல்பட்டு வரும் நிலையில் பிரிட்டன் எங்களுக்கு பொது எதிரி என்று கூறி உள்ளது.

அதே சமயம் பிரித்தானிய அரச தலைமை தங்களை தற்காத்துக் கொள்ள தங்களுக்கு முழுமையாக உரிமை உண்டு என்று கூறி உள்ளது குறிப்பிடத்தக்கது.ஈரான் எங்களுக்கு எதிராக செயல்பட்டு வரும் நிலையில் பிரிட்டன் நேட்டோ நாடுகளுடன் இணைந்து போருக்கு வரும் என்று பிரிட்டிஷ் கூறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த முயற்சி நடந்தால் அந்த முயற்சியில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்று உள்ளது குறிப்பிடத்தக்கது .

ஏனெனில் ஈரானுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை ஒன்றிணைந்து செயற்பட அவர் பல்வேறு வழிகளில் வலியுறுத்தி வந்த தற்போதைய நிலையில் அது ஓரளவு சாத்தியமாகி உள்ளது என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

பல நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் போரில் ஈரான் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா தளங்கள் முழுமையாக துவம்சம் செய்து வரும் நிலையில் பதிலுக்கு அமெரிக்கா ஈரான் உட்கட்டமைப்பு வசதிகள் மீது தாக்குதல் நடத்தும் நிலையில் இரண்டு தரப்பினரும் விட்டு கொடுக்க தயாராக இல்லை என்பதே நிதர்சனமான நிலையாகும்.

குறிப்பாக அமெரிக்க ராணுவ நிலைகளுக்கு மின் உற்பத்தி செய்யும்
அல் தாப்ரா--- அல் உதீத்--- அல் மின்ஹா
அல் தவிலா--அல் ஹர்க்
மேற்கண்ட நான்கு மின் உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த போவதாக ஈரான் அறிவிப்பு செய்துள்ளது பதட்டத்தை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது. இதில் துபாய் ராஸ் லப்பான்--தொழிற்பேட்டை
சவூதி அரேபியா உள்ள ரியாத் மின் உற்பத்தி நிலையம் .



அதேசமயம் அமேரிக்கா வின் C I A (secrat station)இரண்டு ஸ்டேஷன் மீது மிக கடுமையாக தாக்குதல் நடத்தி இருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.இது போன்ற ரகசிய இடங்களை எப்படி அடையாளம் கண்டு ஈரான் தாக்குதல் நடத்துகிறது என்பதை அறிந்து அமெரிக்கா அரச தலைமை அதிர்ச்சியில் உறைந்து போய் இருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கிடையே அமெரிக்கா கடும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் திணறி வருவதாக அமெரிக்கா நாளேடுகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக டொனால்ட் ட்ரம்ப் அரசு அதிகமாக போர்கால ராணுவ நிதியை ஒதுக்கிடு செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்த நிலையில் செனட் சபையின் உக்கிரமான கேள்விகளுக்கு பதில் தர இயலாது நிலைக்கு அமெரிக்கா ராணுவ செயலாளர் பீட் ஹெட்ஸட் திணறிய காட்சி ஊடகங்களில் முழுமையாக ஒளிபரப்பு செய்யப்பட்டது பிறகு உலகம் இதன் உண்மை தன்மையை புரிந்து கொள்ள முடிந்தது..

ஒரு கட்டத்தில் ஜனநாயக கட்சியினர் கடும் கேள்விகளைக் எப்பி இருந்தனர். இதுவரை 37.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் பணத்தை இழந்து மீண்டும் 67 பில்லியன் அமெரிக்க டாலர் பணத்தை செனட் சபையின் முன் பீட் ஹெட்ஸட் கேட்க இவ்வளவு பணம் எதற்கு என்று கேள்வி எழுப்ப பிரச்சினை எல்லை மீறியது.

ஈரான் தோல்வி அடைந்தது என்று அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்த கூறி வரும் நிலையில் ஈரானால் தொடர் தாக்குதலை எப்படி நடத்த முடிகிறது என்று ஜார்ஜியா செனட்டர் ஜான் கேள்வி எழுப்பிய நிலையில் பீட் ஹெட்ஸ் நாங்க முழுமையாக ஈரானை அழித்து விட்டோம் என்று ஒரு போதும் கூறவில்லை என்று பல்டி அடித்து கொள்ளும் வகையில் நிலை மாறி வருவதை காண முடிகிறது.

அதேநேரத்தில் ஹெர்மூஸ் ஜலசந்தி பகுதியில் அமெரிக்கா ஈரான் கப்பல்கள் அணைத்தும் அழிக்கப்பட்டது என்று கூறி வரும் நிலையில் அமெரிக்கா தற்போது வரை ஜலசந்தி வழியாக கப்பல்களை இயக்க முடியவில்லை என்று கேள்வி எழுப்பிய நிலையில் அமெரிக்கா ராணுவ தலைமை உங்களுக்கு அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீதான வெறுப்பு தான் இவ்வாறு கேள்வி கேட்க தூண்டுகிறது என்று கடும் கோபத்தில் பேசிய காட்சிகள் சர்வதேச மீடியாக்களில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

தற்போதைய நிலையில் குவைத், பஹ்ரைன் மற்றும் பல்வேறு நாடுகளில் இருந்து பொதுமக்கள் உடனடியாக தங்கள் வீடுகளை காலி செய்து விட்டு வேறு பாதுகாப்பான இடங்களுக்கும் இடம் பெயர ஈரான் வேண்டுகோள் விடுவித்துளளது குறிப்பிடத்தக்கது..

ஈரான் தாக்குதல் அராஸ் காமிக்காஸ் ட்ரோன்கள் மூலம் பஹ்ரைன் அமெரிக்கா நிலைகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் நிலைமை மிகவும் மோசமடைந்தது வருகிறது.

அதே சமயம் ஜோர்டானில் உள்ள அல் அஷ்ரக் ஏர் ஃபேஸ் விமானங்கள் aircraft hangers மற்றும் விமான தளங்கள் முழுமையாக காலி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. அதே சமயம் பஹ்ரைனில் உள்ள அமேசான் கம்பெனி மீது இரண்டாம் முறையாக ஈரான் தாக்குதல் நடத்த மிகப் பெரிய அளவில் ஆன சேதம் ஆகியுள்ளது.



இங்கே உள்ள அமெரிக்கா நேவல் ஃபேஸ் மீண்டும் தாக்குதல் உள்ளாகி முழுமையாக அழிவைத் சந்தித்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனை ஈரானின் ஐ ஆர் ஜி சி உறுதி செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது .அதேநேரத்தில் குவைத்தில் உள்ள அமெரிக்கா முக்கியமான ஆயுத கிடங்கில் ஏவுகணை தாக்குதல் நடத்த மிகப் பெரிய அளவில் ஆன அழிவை அமெரிக்கா சந்தித்து உள்ளது குறிப்பிடத்தக்கது . மேலும் குவைத்தில் உள்ள அல் உதைரி தளத்தில் உள்ள ஏராளமான கட்டிடங்கள் துவம்சம் மற்றும் ஆயூதங்கள் அழிந்து பற்றி எரிகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது .

இதற்கு பழி வாங்கும் நோக்கில் ஈரானின் ஈரோபில் ஏர் போர்ட் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் பந்தர் அப்பாஸ் துறைமுகம், ஈரானின் பிராட் காஸ்ட் நிறுவனங்கள் தாக்குதலை சந்தித்து வருகிறது என்பதை யாதர்த்தமான நிலையாகும் . தற்போதைய நிலையில் அமெரிக்கா மற்றும் ஈரான் பரஸ்பரம் 14 நாட்கள் தாண்டி பயங்கர தாக்குதலை நிகழ்த்தி வருவதைக் காண முடிகிறது. மேலும் காஸ்பியன் கடல் பகுதியில் ஈரான் நிலைகளைக் குறி வைத்து அமெரிக்கா வால் நடத்தப்பட்ட தாக்குதலை ஈரானின் புரட்சி படை ஐ ஆர் ஜி சி தெளிவாக ஒப்புக் கொண்டுள்ளது

அதேநேரத்தில் மற்றொரு தாக்குதலில் 55 பேர் பலியானதாக ஈரானின் சுகாதார துறை அறிவிப்பு செய்துள்ளது பதட்டத்தை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது.

அதேநேரத்தில் ஈரானின் அவாஸ் , பந்தர் அப்பாஸ் -- கொரம்பாத் ஆகிய ஈரான் நகரங்கள் கடும் தாக்குதல் உள்ளாகி உள்ளது. ஈரானில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதே உண்மையாகும்.

குவைத்தில் உள்ள அமெரிக்கா ராணுவ நிலைகள் முழுமையாக அழிக்கும் வகையில் நிலைமை மோசமாகி விட்டது. குவைத் பல்வேறு பகுதிகளில் அமெரிக்கா ராணுவ களஞ்சியம் மற்றும் ஆயுத கிடங்கில் ஏவுகணை தாக்குதல் ஈரானால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக அலி அல் சலேம் --(ராணுவ தளவாடங்கள்) -கேம்ப் உதிரி.. கேம்ப் டோஹா --- கேம்ப் ஆரிஃப் ஜான்.. முற்றிலுமாக அழிக்கப்பட்டது. அமெரிக்கா இந்த தாக்குதல் குறித்து வாய் திறக்காத நிலையில் மேலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பஹ்ரைன் சேக் ஈஷா... பஹ்ரைன் அமேசான் டேட்டா சென்டர் இரண்டாம் நாளாக தாக்குதல் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையில் அமெரிக்கா ராணுவ ஏவுகணை மிகவும் குறைந்த நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது . இத்தனை பெண்டகன் ராணுவ அதிகாரி தெரிவித்தார். பெண்டகன் கருத்துப்படி ஏவுகணை மற்றும் ஆயுதங்கள் மிகவும் குறைந்த நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது இதனைத் வெள்ளை மாளிகையில் யாரும் சொல்ல வில்லை என்கிற நிலையில் வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்ட செய்திகள் மூலம் இது உறுதி செய்யப்படுகிறது

அதேநேரத்தில் டெலிகிராப் வெளியிட்ட செய்தியில் அமெரிக்கா ராணுவ அதிகாரிகள் இடையே கடும் மோதல் ஏற்பட்டுள்ளது என்பதை அந்த நாளிதழ் சுட்டி காட்ட தவறவில்லை. அமெரிக்கா அதிகாரிகள் மற்றும் அமெரிக்கா ராணுவ துறை செயலாளர் பீட் ஹெட்ஸட் இடையான கருத்து வேறுபாடு காரணமாக இது போன்ற நிலை உருவானது என்று அந்த செய்தி கூறியுள்ளது.

13 க்கு மேற்பட்ட வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்கா தளங்களில் விமானங்கள் இனி நிறுத்துவது தவறான முடிவாக இருக்கும் என்று அமெரிக்கா அதிகாரிகள் தரப்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் இனி வரும் காலங்களில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இல்லை என்று ஈரான் கூறி உள்ளது. ஏற்கனவே நடைபெற்ற அனைத்து ஒப்பந்தமும் காலி ஆகிய நிலையில் ஈரான் கடும் மன உறுதி யுடன் செயல்பட்டு வரும் நிலையில் வரும் நாட்களில் இது அமெரிக்காவுக்கு எல்லா நிலைகளிலும் கடும் சிக்கல் ஏற்படும் என்று சர்வதேச வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா இடையே புதிய அணு ஒப்பந்தம் அறிவிக்கப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ள நிலையில் தற்போது அதுவும் கேள்வி குறியாக மாறி வருகிறது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்க நிறுவனங்கள் சவுதி நிலப்பரப்பில் அணு மின் நிலையங்களை இயக்கும் வகையில் ஒப்பந்தம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் 30 ஆண்டுகள் நீடிக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.சவுதி அரேபியாவுக்கு தானாகவே யுரேனியத்தை செறிவூட்டும் (enrich) அதிகாரமும் வழங்கப்படலாம் என அறிக்கைகள் கூறுகின்றன.இது, 2009-ல் அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே கையெழுத்தான ஒப்பந்தத்திலிருந்து மாறுபட்டதாகும். அப்போது அமீரகத்திற்கு தானாக எரிபொருள் தயாரிக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

இஸ்ரேல் உள்ளிட்ட சில நாடுகள் இந்த ஒப்பந்தம் சவுதி அரேபியாவுக்கு எதிர்காலத்தில் அணு ஆயுதம் உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் என்று கவலை தெரிவித்துள்ளன.எனினும், அமெரிக்கா இந்த ஒப்பந்தம் முழுக்க குடிமக்கள் பயன்பாட்டிற்காக மட்டுமே என வலியுறுத்துகிறது.

2008-ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா-சவுதி இடையே அணு ஆற்றல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன. பல தடைகள் இருந்தபோதிலும், தற்போது இரு நாடுகளும் வணிக ரீதியான ஒப்பந்தத்தில் இணைந்துள்ளன. விரைவில் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் திடீர் பல்டி அடித்து ஒப்பந்தத்தை ரத்து செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது செய்திகளாக வெளியாகியுள்ளன. இதற்கு மூல காரணம் சவூதி அரேபியா இந்த ஒப்பந்தம் மூலம் இஸ்ரேல் நாட்டை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்து இருந்த நிலையில் சவுதி அரேபியா அமெரிக்காவின் கோரிக்கையை முழுமையாக நிராகரிப்பு செய்த நிலையில் இது மத்திய கிழக்கு நாடுகளில் புதிய பதட்டத்தை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது.

அதே சமயம் செங்கடல் பகுதியில் கப்பல்கள் செல்ல தடை செய்யப்பட்டுள்ளது. ஹொதீக்கள் பாப் அல் மந்தப் மூடல் நடவடிக்கைகள் தொடர போவதாக தெரிவித்த நிலையில் ஹெர்மூஸ் ஜலசந்தி ஏற்பட்ட அதே சிக்கல் இங்கும் தொடர்வது தவிர்க்க இயலாத ஒன்றாக மாறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கு சவூதி அரேபியா வெளிவிவகார அமைச்சர் கடும் கண்டனத்தை பதிவு செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது.அதே நேரத்தில் சர்வதேச நாடுகள் சட்டத்தின் கீழ் அணைத்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2014 சிவில் வார் ஏமெனில் நடந்த போரில் படு பயங்கர தாக்குதலுக்கு உள்ளான நிலையில் உலகின் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஆன போர் இதுவாகும். வடக்கு ஏமென் பகுதியில் சனா தலைநகர் ஆக ஹொதீக்கள் மக்கள் போர் படை தற்போது செயல்பட்டு வருகிறது.

தற்போது மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் அமைதியற்ற ஒரு சூழல் காணப்படுகிறது. இந்த சூழ்நிலையில் ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் மோதி கொள்ளும் நிலையில் இது தற்போது மத்திய ஆசியா தாண்டி ஐரோப்பிய நாடுகளில் பரவும் தன்மையை அவதானிக்கும் போது மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்..

# பஸ் ஹென்னா பிரைடல் அகடமியின் முதலாவது பொதுப்பட்டமளிப்பு விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பெண்கள் மத்தியில் திறமைகளை இனங்கண்டு ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் பஸ் ஹென்னா பிரைடல் அகடமியின் முதலாவது டிப்ளோமா பட்டமளிப்பு விழா, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அதன் பணிப்பாளர் பஸ்ரினா பஸீல் தலைமையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், மருதாணிக் கலை மற்றும் மருதாணிக் கலவை தயாரிப்பு உள்ளிட்ட கற்கை நெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த நூற்றிற்கும் மேற்பட்ட





மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டதுடன், இக்கற்கை நெறிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு விசேட கௌரவிப்புகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூஸா கலந்து சிறப்பித்துடன், கௌரவ அதிதிகளாக, தியத்தலாவ ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் பி. ரிம்ஸான், ஆர்.ஜே.மீடியா ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் ஊடகவியலாளர் எ.எம். இன்சாப், ஊடகவியலாளர் எ.பி.எம். நிஸ்ரின், ஸிக்னேச்சர் குளோ நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.எச்.இஷ்ரத் றிஜா, உளவியல் ஆலோசகர் ஆயிஷா பானு ஹசன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

மேலும், இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பெருமளவில் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை பொது சன நூலகர் ஒன்றியத்தின் புதிய தேசிய தலைவராக கே.எம். நிஷாத் தெரிவு

(எம்.யூ.எம்.சனூன்)

அகில இலங்கை பொது சன நூலகர் ஒன்றியத்தின் தேசிய தலைவராக கே.எம். நிஷாத் அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் பொது நூலகத்தின் பிரதம நூலகராகப் பணியாற்றி வரும் இவர், இலங்கை நூலகச் சங்கத்தின், நூலக தகவல் விஞ்ஞான வருகைத்தரு விரிவுரையாளராகவும் செயல்பட்டு வருகிறார்.

நூலகத் துறையில் பல ஆண்டுகால அனுபவம் கொண்ட இவர், இதற்கு முன்னர் சர்வதேச தனியார் பல்கலைக் கழகத்திலும், வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் பொது நூலகம் மற்றும் மன்னார் பொது நூலகம் ஆகியவற்றில் நூலகராகப் பணியாற்றி, அப்பகுதிகளின் நூலகச் சேவைகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார்.

இலங்கை முழுவதும் உள்ள பொது சன நூலகங்களின் தரம், உட்கட்டமைப்பு மற்றும் நூலகர்களின் தொழில் முறை நலன்களை மேம்படுத்துவதில் இவரது நீண்டகால அனுபவமும் தலைமைத்துவமும் பெரிதும் துணைபுரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இலங்கை பொது சன நூலகர் ஒன்றியம் என்பது இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் பொது நூலகர்களின் தொழில்முறை மேம்பாடு மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயல்படும் ஒரு முதன்மை



அமைப்பாகும்.

இவ் ஒன்றியத்தின் நோக்கங்கள், பொது நூலகர்களின் சம்பள முரண்பாடுகள், பதவி உயர்வுகள் மற்றும் பணிச்சூழல் சார்ந்த கோரிக்கைகளுக்குத் தீர்வுகாண குரல் கொடுப்பதாகும்.

நூலகர்களுக்கு நவீன நூலக முகாமைத்துவம், தொழில் நுட்பப் பயன்பாடு மற்றும் நாடு முழுவதும் உள்ள பொது நூலகங்களின் உட்கட்டமைப்பு மற்றும் சேவைத் தரத்தை உயர்த்த உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் தொடர்புடைய அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதோடு நாடு முழுவதிலும் உள்ள பொது நூலகர்களை ஒரு கூட்டிணைப்பின் கீழ் கொண்டுவந்து, அவர்களுக்கிடையேயான தொழில்முறை ஒத்துழைப்பை அதிகரிப்பது என்பன இவ் ஒன்றியத்தின் நோக்கங்களாகும்.

# வெளிவிவகார அமைச்சு ஏற்பாட்டில் ஒருநாள் பயிற்சி பட்டறை





பாதுகாப்பான, ஒழுங்குமுறையான மற்றும் சட்டபூர்வமான புலம்பெயர்வை மேம்படுத்தும் நோக்கில், அரசாங்க நிறுவனங்கள், இலங்கை புலம்பெயர்வோர் தகவல் மையம் (MIC Sri Lanka) மற்றும் ஊடகங்களின் பங்களிப்பை வலுப்படுத்தும் ஒரு நாள் பயிற்சிப் பட்டறை கடந்த 27ஆம் கொழும்பு ஊழரசவயசன டிலஆயசசழைவவ ஹோட்டலில் நடைபெற்றது.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர சூம்மூலம் உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளர் எஸ்.எம்.எஸ்.டி. குணசிங்க, ஐஊஆஊனு பிரதிநிதிகள் Ms.Sonya Douglas - Counsellor, Irregular Migration New Zealand High Commision of Sri Lanka & Maldives, Golda Myra Roma - Senior Project Manager International Centre for Migration Policy Development (ICMPD) அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புலம்பெயர்வு தொடர்பான சரியான சொற்கள், மீள்வும் மீளிணைவும், ஒழுக்கநெறி சார்ந்த தொழிலாளர் ஆட்சேர்ப்பு, சட்டவிரோத புலம்பெயர்வின் அபாயங்கள், மோசடி ஆட்சேர்ப்பு, புலம்பெயர்வோர் கடத்தல் மற்றும் மனிதக் கடத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஊடகவியலாளர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடையே மேம்படுத்துவது இந்தப் பட்டறையின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

மேலும், புலம்பெயர்வு தொடர்பான நியாயமான மற்றும் பொறுப்பான ஊடகச் செய்தியிடலை ஊக்குவிப்பதோடு, அரசாங்கம், ஊடகங்கள் மற்றும் MIC இலங்கை ஆகியவற்றுக் கிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பட்டறையில் உலகளாவிய தொழிலாளர் புலம்பெயர்வு போக்குகள், தேசிய புலம்பெயர்வு கொள்கைகள், ஊடக ஒழுக்கம், தீர்வுமுக செய்தியியல் (Solution Journalism), நிபுணர்களை அணுகும் நடைமுறைகள் மற்றும் குழு செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு அமர்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பங்கேற்ற ஊடகவியலாளர்கள், புலம்பெயர்வு தொடர்பான துல்லியமான, சமநிலையான மற்றும் பொறுப்பான செய்தியிடலின் அவசியம் குறித்து விரிவான பயிற்சியையும் வழிகாட்டல்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# “இந்திய முஸ்லிம் மாற்றுக் கட்டமைப்பு 2030 திட்டம் அறிமுக விழாவில் மலேசியப் பிரதமர் அன்வார் இப்ராஹிம் முன்னிலையில் ராயல் கிங்ஸ் குழுமத் தலைவர் சிராஜுதீன் ரூ. 24 லட்சம் கல்வி நிதி அறிவிப்பு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

மலேசிய இந்திய முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சியை நோக்கி வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய அத்தியாயம் ஒன்று பினாங்கில் தொடங்கப்பட்டுள்ளது. இந்திய முஸ்லிம் சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், தொழில்முனைவு, தலைமைத்துவம் மற்றும் சமூக முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள “இந்திய முஸ்லிம் மாற்றுக் கட்டமைப்பு 2030 திட்டம் மலேசியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அவர்களால் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

“ஒரே அடையாளம் - ஒரே இலக்கு -ஒரே சமூகம்” என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வு, இந்திய முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்திற்கான முக்கிய மைல் கல்லாகக் கருதப்படுகிறது. மலேசியா முழுவதிலுமிருந்து சமூகத் தலைவர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், இளைஞர் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சிங்கப்பூரின் முன்னணி தொழில்முனைவோரில் ஒருவரும், ராயல் கிங்ஸ் குழுமத்தின்







நிறுவனர் மற்றும் தலைவருமான சிராஜுதீன் பின் செய்யது முஹம்மது, இந்திய முஸ்லிம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக ரூ. 24 லட்சம் கல்வி ஆதரவு நிதியை வழங்குவதாக அறிவித்தார். மேலும், திறமையுள்ள ஆனால் பொருளாதார வசதி குறைந்த மாணவர்களின் உயர்கல்வியை ஆதரிக்கும் “மாணவர் கல்வி தத்தெடுப்பு திட்டத்தில்” தமது பங்களிப்பை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார்.

மனிதநேய சேவையையும் சமூகப் பொறுப்பையும் தனது நிறுவன தத்துவத்தின் முக்கிய அங்கமாகக் கொண்டுள்ள ராயல் கிங்ஸ் குழுமம், கல்வி, சமூக நலன், இளைஞர் மேம்பாடு மற்றும் தேவைப்படுவோருக்கான உதவித் திட்டங்களுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. சமூக முன்னேற்றமே நிலையான வளர்ச்சிக்கான அடித்தளம் என்ற நம்பிக்கையுடன், தொண்டு மற்றும் சமூகப் பணிகளுக்கு ராயல் கிங்ஸ் குழுமம் எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது. சிங்கப்பூர், ஆசியா மற்றும் உலகளாவிய அளவில் பல்வேறு சமூகப் பொறுப்பு முயற்சிகளை முன்னெடுத்து வரும் குழுமம், கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதிலும், அடுத்த தலைமுறையின் முன்னேற்றத்திற்கான முதலீடுகளை மேற்கொள்வதிலும் உறுதியாக செயல்பட்டு வருகிறது.

நிகழ்வின் போது மலேசியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்திய சிராஜுதீன், சமூக முன்னேற்றம் மற்றும் கல்வி மாற்றம் தொடர்பாக கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். பிரதமருடன் நடைபெற்ற இந்த சந்திப்பு தமக்கு மிகுந்த பெருமையையும் ஊக்கத்தையும் அளித்ததாக அவர் பின்னர் தெரிவித்தார்.

தனது உரையில் பிரதமர் அன்வார் இப்ராஹிம், மலேசிய இந்திய முஸ்லிம் சமூகம் நாட்டின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக பாராட்டினார். சிறுபான்மை சமூகமாக இருந்தாலும் உறுதியான மனப்பான்மை, திறமை, அர்ப்பணிப்பு மற்றும் மாற்றத்தை உருவாக்கும் ஆற்றல் இந்திய முஸ்லிம் சமூகத்திடம் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

IMTF 2030 திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டால், அது மலேசியாவின் 'மடானி' (MADANI) தேசிய முன்னேற்றக் கொள்கைக்கு வலுசேர்க்கும் சமூக மாற்ற முயற்சியாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்திய முஸ்லிம் சமூகத்தினர் தங்களது உரிமைகள் மற்றும் முன்னேற்றத்தை முன்னிறுத்துவதோடு, பிற இனங்களுடனான நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் பாலமாகவும் தொடர்ந்து செயல்பட வேண்டும் என பிரதமர் அழைப்பு விடுத்தார்.



# அமெரிக்கா எனும் மாய பிம்பத்தை பொறியில் சிக்க வைத்த ஈரான்



எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)

ஈரான் உடனான போரில் அமெரிக்காவுக்கு இரண்டே இரண்டு வழிகள் மட்டுமே என்ன இருக்கிறது.. முதலாவது கடும் போருக்கு தயாராக வேண்டும். இதனைத் அமெரிக்கா பொது சமூகம் ஏற்றுக் கொள்ள இயலாது . இந்த கடும் போரில் ஈடுபட்டால் அமெரிக்கா பொருளாதாரம் தடைபட்டு செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டு விடும் சாத்தியம் இருப்பதால் அமெரிக்கா இது போன்ற ஆபத்தான முடிவுகளைக் எடுக்க கடுமையாக யோசிக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

இரண்டாம் நிலை சுமூகமாக பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு ஏற்பட வேண்டும். இது போன்ற நடவடிக்கைகள் தான் அமெரிக்கா இரண்டு விதமான தலைவலி திருகு வழி ஏற்பட்டு உள்ளது. அதே நேரத்தில் ஈரான் உச்ச பட்ச தலைவர் மொஜ்தபா கொமேனி உட்பட கடும் போக்கு வாதிகள்.... மரணமா அல்லது சாவா எந்த நிலைக்கு ஈரான் தள்ளப்பட்டு விட்டது. ஆகவேதான் அவர்களுக்குள் எந்த ஒரு நிலையிலும் தயக்கம் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும். அதேநேரத்தில் அமெரிக்கா ஆட்சி ஸ்ரத்தன்மை இல்லாது என்பதையும் ஈரான் ஆட்சியாளர்கள் நன்கு உணர்ந்து கொள்ள துவங்கி உள்ளனர். அமெரிக்கா என்ன செய்ய முடியும் என்று கேள்வி எழுந்துள்ளது.

மற்றொரு நிலையில் ஈரானின் – ஐ ஆர் ஜி சி -- இயக்கம் பேச்சுவார்த்தை குழப்பும் முயன்று வருகின்றனர் என்று தற்போது நிலை மாறி வருவதை காண முடிகிறது. ஈரான் அரசியல் தலைமை செயல் பட இயலாத நிலைக்கு தள்ளப்பட்டு பேச்சுவார்த்தை நடத்த ஈரான் தற்போது தயாராக இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும். மேலும் இஸ்ரேல் தற்போது போருக்கு தயாராக இருப்பதாக கூறப்படுகிறது. இதனைத் இஸ்ரேல் உறுதி செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது. கட்டுப்படுத்த இயலாது நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது இது போன்ற சூழல் .மத்திய கிழக்கு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் புதன்கிழமை குழஓ நேறள-க்கு அளித்த பேட்டியில், மத்திய கிழக்கில் அமெரிக்கப் படைகளை குறிவைத்து ஈரான் மேற்கொண்ட புதிய தாக்குதல் களுக்கு அமெரிக்கா எவ்வாறு பதிலளிக்கும் என்று கேட்கப்பட்டபோது, “அவர்களை மிகக் கடுமையாகத் தாக்குவோம்” என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் ஈராக்கில் பயிற்சி பெற்ற ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்கள் மீது அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியா இணைந்து நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 20 பேர் உயிரிழந்துள்ளனர் என்று Popular Mobilization Forces (PMF) என்ற குடை அமைப்பு புதன் கிழமை தெரிவித்தது..ீஆகு 2,40000 படை வீரர்கள் இந்த ராணுவ நிலைகளில் பயிற்சி எடுத்து இருக்கும் நிலையில் சவுதி அரேபியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் விமானங்கள் மூலம் மிக கடுமையான தாக்குதலை நடத்தி இருப்பது சவுதி அரேபியா விற்கு பிராந்திய நிலையில் மிகப் பெரிய அளவில் ஆன நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஈரான் அரசு துணை படைகளாக இவர்களை பயன்படுத்தி தான் குர்திஷ் படைகளை இதுவரை தடுத்து வந்த நிலையில் இது முக்கோண பரிமாண சிக்கலை பிராந்தியத்தில் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தான் சவூதி அரேபியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் இணைந்து இவர்கள் மீது தாக்குதல் நடத்திய நிலையில் தான் ஈரான் பதிலடியாக ஜோர்டான் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தி இருக்கிறது.சவூதி அரேபியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளும் இணைந்து ஈராக் நிலை கொண்டுள்ள ஈரான் ஆதரவு ஆக்ஸிஸ் Popular mobilization force and aze sahabi gurope மீதான தாக்குதலுக்கு பதிலடி தரும் வகையில் நிலை மாறி வருவதை காண முடிகிறது.இந்த போக்கில் மத்திய கிழக்கு நாடுகள் முழுமையாக போரில் சிக்குண்டு போகும் அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது என்பதே உண்மையாகும்.

அமெரிக்காவின் மத்திய கட்டளை (CENTCOM), செவ்வாய்க்கிழமை இரவு ஈராகில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற குழுக்களின் நிலைகள் மீது அமெரிக்கா மற்றும் சவுதி படைகள் இணைந்து தாக்குதல் நடத்தியதாக கூறியது. இந்தப் போரின் போது, வளைகுடா நாடொன்று நேரடியாக ஈடுபட்டு மேற்கொண்ட முதல் உறுதிப்படுத்தப்பட்ட தாக்குதல் இதுவாகும்இ ஜோர்டான் இராணுவம், புதன்கிழமை ஈரான் ஏவிய புதிய ஏவுகணைத் தாக்குதல் அலைகளை தாங்கள் இடைமறித்து அழித்ததாக தெரிவித்தது. இதற்கு முந்தைய நாளில், அமெரிக்க இராணுவம், பிராந்தியத்தில் உள்ள அமெரிக்கப் படைகளை குறிவைத்து ஈரான் மேற்கொள்ள முயன்ற “திடீர் தாக்குதலை” தடுத்து முறியடித்ததாக ஜோர்டான் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 5 மாதம் தொடர்ந்து நடந்து வரும் போர் மூலம் ஈரான் ஏவுகணை தொழில்நுட்பங்கள் கட்டமைப்பு அமெரிக்கா வை பல்வேறு வகைகளில் அமெரிக்கா வை பல மடங்கு பின்னோக்கி அனுப்பி வைத்து உள்ளது குறிப்பிடத் தக்கது. உலகின் வெல்ல இயலாத மாபெரும் சக்தி அமெரிக்கா என்கிற ஒரு வித மாய பிம்பத்தை ஈரான் மத்திய கிழக்கில் முழுமையாக அழித்து விட்டது என்பதே உண்மையாகும்.

அதே சமயம் பிராந்தியத்தின் எரிசக்தி உள்கட்டமைப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய, மேலும் பல நாடுகளை இந்த மோதலுக்குள் இழுக்கக்கூடிய, கச்சா எண்ணெய் விலையை உயர்த்தக் கூடிய மற்றும் அமெரிக்காவின் இராணுவ வளங்கள் மீது கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடிய விரிவான பிராந்திய மோதலில் ஈடுபடுவதற்கான விருப்பம் அமெரிக்காவுக்கு குறைவாகவே உள்ளது. ஏனெனில் அமெரிக்கா வின் பலவீனமான வான் பாதுகாப்பு அமைப்பு, பாதிக்கப்படக்கூடிய தொழில்முறை கட்டமைப்புகள் மற்றும் தடைகளால் முடங்கியுள்ள பொருளாதாரம் ஆகியவை, வரவிருக்கும் இழப்புகளைச் சரிசெய்வதை மேலும் கடினமாகவும் செலவு மிகுந்ததாகவும் அமெரிக்கா வை முழுமையாக மாற்றும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால் அதே சமயம் இரானின் பார்வையில், தடைகள், முற்றுகை மற்றும் பொருளாதாரத் தனிமைப்படுத்தல் ஆகியவற்றை மாற்றாமல் அப்படியே விட்டுவிடும் ஒரு போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொள்வதை விட, இந்த நெருக்கடியை உயிர்ப்புடன் வைத்திருப்பது விரும்பத்தக்கதாக இருக்கலாம். ஈரான் அரச தலைமைக்கு இதில் பலவிதமான இதில் உள்நாட்டு அரசியல் கணக்கீடு களும் இருக்கலாம். குறிப்பாக ஈரான் நாட்டின் உயர்ந்த பணவீக்கம், வேலை யின்மை, பொருளாதாரச் சிரமங்கள் மற்றும் பொதுமக்களின் அதிருப்தியை இரான் தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது.வெளிப்புற மோதல்கள் நீடிக்கும் காலங்களில், உள்நாட்டு எதிர்ப்பை ஒடுக்கவும், கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை நியாயப் படுத்தவும், தேசியப் பாதுகாப்பை மையமாகக் கொண்டு ஆதரவைத் திரட்டவும் அரசுகளுக்கு பொதுவாக எளிதாக இருக்கும்.அது இரானின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்காது. ஆனால் அவற்றால் உருவஹாகும் உடனடி அரசியல் அழுத்தத்தைக் குறைக்கக்கூடும்.

இந்தச் சூழலில் தான் ஈரான் மீதான தாக்குதலை நிறுத்துவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்திருக்கிறார். தாக்குதலை தொடர வேண்டாம் என ஈரான் மட்டுமின்றி இதர மத்திய கிழக்கு நாடுகள் கூட தங்களிடம் கேட்டுக் கொண்டதாகவும் அதைத் தொடர்ந்தே தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தியதா கவும் டிரம்ப் கூறியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தனது ட்ஷரூத் சோஷியல்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில், “இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இல்லாத அளவுக்கு மிக பெரிய ராணுவ வலிமையுடன் ஈரான் மீது தாக்குதல் நடத்த தயாராக இருந்தோம். அமெரிக்க ராணுவம் முழுமையாக தயார்நிலையில் இருந்தது. ஆனால், ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக ஈரான் கூறியது. மேலும், தாக்குதலை நடத்த வேண்டாம் என பிற மத்திய கிழக்கு நாடுகளும் கேட்டுக் கொண்டன. அதை தொடர்ந்தே தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தி வைத்தோம் என்று டொனால்ட் டிரம்ப் கூறினார்.

ஹார்முஸ் ஜலசந்தியை உடனடியாக, முழுமையாக திறப்பது மற்றும் ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தலுக்கு முற்றுப் புள்ளி வைப்பது தொடர்பான ஒப்பந்தம் இறுதி கட்டத்தில் இருக்கிறது. சர்வதேச நலனுக்காகவும், அமைதியான ஈரானின் எதிர்காலத்திற்காகவும், விரைவில் ஒப்பந்தம் எட்டப்படும் என்ற நம்பிக்கையிலும் தாக்குதலை தற்போது ரத்து செய்ய ஒப்புக்கொண்டேன். ஆனால், விரைவில் ஒப்பந்தம் எட்டப்பட வேண்டும் என்பதே நிபந்தனை” என்று டிரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்கா– ஈரான் இடையே கடந்த சில நாட்களாக பதற்றம் அதிகரித்து வந்த சூழலில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதற்கு முன்பு, துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் ஹகான் ஃபிதான், பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீர் மற்றும் சவுதி அரேபிய வெளியுறவுத்துறை அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃ பர்ஹான் ஆகியோருடன் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்ச்சி தனித்தனியாக ஆலோசனை நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. அப்போது அமெரிக்கா அல்லது இஸ்ரேல் ஈரான் மீது மீண்டும் ராணுவ நடவடிக்கை மேற்கொண்டால், அதற்கு தீர்க்கமான பதிலடி கொடுக்கப்படும் என்று அராக்ச்சி எச்சரித்ததாக தகவல்கள் வெளியாகின.



ஹார்முஸ் ஜலசந்தி உலகின் மிக முக்கியமான எண்ணெய் கப்பல் போக்குவரத்து வழித்தடங்களில் ஒன்றாகும். உலகளவில் ஏற்றுமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்யில் 20மூ இந்த வழித்தடம் வழியாகவே செல்கிறது. எனவே, இந்த ஜலசந்தியை திறந்து வைப்பது தொடர்பான ஒப்பந்தம் உலக பொருளாதாரத்திற்கும் எரிசக்தி மார்கெட்டிற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இதன் காரணமாகவே டிரம்பின் இந்த அறிவிப்பு ஈரான் மட்டுமின்றி ஒட்டுமொத்த உலக நாடுகளுக்கும் நிம்மதி பெருமூச்சை விட வைத்திருக்கிறது.

# சிறப்பாக நடைபெற்ற "அல் அகீதா அஸ்-ஸஹீஹா" நூல் வெளியீட்டு விழா







**(ஏ.எஸ்.எம்.ஜாவித், பி.எம்.முக்தார், அஷ்ரப் ஏ சமத்)**

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் அகீதாவை, ஆதாரபூர்வமான இஸ்லாமிய நூல்களையும் அஷ்அரி மரபுவழி அறிஞர்களின் விளக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ள "அல் அகீதா அஸ்-ஸஹீஹா" என்ற நூலின் உத்தி-யோக
பூர்வ வெளியீட்டு விழா, 2026 ஆகஸ்ட் 1 ஆம் தேதி (சனிக்கிழமை) காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) லோட்டஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நூலை பிரபல இஸ்லாமிய மார்க்க அறிஞர்களில் ஒருவரான அல்-ஆலிம் சி.ஐ.எம். அஸ்மீர் (ஹஸனி) அவர்கள் தொகுத்து எழுதியுள்ளார். சமகாலத்தில் அகீதா தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு கேள்விகளுக்கு, அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் மரபுவழி நிலைப்பாட்டை தெளிவாகவும் ஆதாரபூர்வமாகவும் விளக்கும் நோக்கில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு நாட்டின் பல்வேறு தரீகாக்களைச் சேர்ந்த முன்னணி மார்க்க அறிஞர்கள் அணிந்துரைகளையும் வாழ்த்துரைகளையும் வழங்கியிருப்பது இதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

நிகழ்வின் தலைமைத்துவத்தை காலி அலீய்யா இஸ்லாமிய சட்டக்கல்லூரி பணிப்பாளர் காலி மாவட்ட உலமா சபைத் தலைவருமான சங்கைக்குறிய கலீபதுல் குலபா மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸுஹ்ர் (பாரி) அவர்கள் வகிக்க, நூலை தெந்இந்தியாவின் முன்னணி இஸ்லாமீய மார்க்க அறிஞர்களில் ஒருவரான அல்-ஆலிம் டாக்டர் ஸதீதுத்தீன் (பாகவி- பீ.எச்.டி) அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

அகில இலங்கை ஜமியத்துல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளருமான கலீபதுஷ் ஷாதுலி அஷ்ஷெய்க் அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) வரவேற்புறை நிகழ்த்தினார்

கடார் ஹமாத் பின் கலீபா சர்வ தேச இஸ்லாமிய பல்கலைக் கழக பேராசிரியர் அல்-ஆலிம் டாக்டர் எம்.எம். தீன் முஹம்மத் மீரா ஸாஹிப் (அல்-அஸ்ஹரி) வாழ்து செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்,

கடார் பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் அல் ஆலிம் ஏ.பி.எம். மஃரூஃப் ஆதம் பாவா (அல்-அஸ்ஹரி) மற்றும் கொழும்பு உம்மு ஸாவியா அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி முதல்வர் கலீஃபதுஷ் ஷாஸுலி மௌவலி அல்ஹாஜ் எம். அஹ்மத் சூபி (மஹ்லரி) ஆகியோரும் இங்கு உரை நிகழ்த்தியதோடு இனிமையான கஸீதாக்கலும் பாடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சங்கை மிகு சேகுமார்கள் உலமாக்கள், கல்வியாளர்கள் அரபுக் கல்லூரி அதிபர்கள் மற்றும் சமயப் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை "அல் அகீதா அஸ்-ஸஹீஹா" நூல் வெளியீட்டு விழா -2026 குழு மேற்கொண்டிருந்தமையும் குரிப்பிடத்தக்கது.

(முதல் பிரதியை பேருவளை பிரபல இரத்தினக் கல் வர்த்தகர் அல் ஹாஜ் அப்துல் ஹாதி முஹம்மத் இஜ்லான் பெற்றுக் கொண்டார் இரண்டாம் பிரதியை பிரபல இரத்தினக் கல் வர்த்தகர் அல்ஹாஜ் பஸ்லி முனாஸ்.)

# பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் புத்தளம் தள வைத்தியசாலைக்கு விஜயம்





**(எம்.யூ.எம்.சனூன்)**

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் புத்தளம் தள வைத்தியசாலைக்கு கடந்த 29ஆம் திகதி விசேட விஜயமொன்றை மேற்கொண்டு, வைத்தியசாலையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட்டார்.

இதன்போது, இலங்கை விமானப் படையின் உதவியுடன் ஆறாம் வார்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை அவர் விசேடமாக மேற்பார்வையிட்டார்.

மேலும், வைத்தியசாலையின் குழந்தைகள் வார்டின் கூரையை முழுமையாகப் புனரமைப்பதற்கான உதவிகளை வழங்கும் நோக்கில், நன்கொடையாளர் ஒருவரையும் அவர் அழைத்து வந்திருந்தார்.

வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் தொடர்ந்து வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் மனைவி தனது ஆரம்ப மருத்துவப் பயிற்சியை இதே வைத்தியசாலையில் பெற்றிருந்தமை, இந்த விஜயத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இவ்விஜயத்தின்போது, புத்தளம் மாநகர முதல்வர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மட், புத்தளம் தள வைத்தியசாலையின் புதிய வைத்திய அத்தியட்சகர், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை வரவேற்றனர்.

விஜயத்தை நினைவுகூரும் வகையில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

# கல்முனை வலயத்தில் இரண்டாமிடம்

## களிகம்பு மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையே நடாத்தப்பட்ட முஸ்லிம் கலாசார போட்டியில் கல்முனை வலய மட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் சாய்ந்தமருது அல்-ஹில-ால் பாடசாலை மாணவர்கள் களிகம்பு (பொல்லடி) நிகழ்ச்சியில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இம்மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தினால் இம்மாணவர்களுக்கு பாடசாலையில் காலை ஆராதனையின் போது சான்றிதழ்கள் வழங்கி வழங்க-ப்பட்டன.

இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களான எம்.எம்.எம். சல்பி, ஆர்.எம். றிவி, ஏ.எம். அஹ்திர், ஆர். கம்ரான் அஹ்மத், எம்.என்.எம். மாயிஸ், என்.எம். நப்லான், எம்.எம்.றினாஸ், என்.எம்.அப்றி, எம்.ஏ. ஆபித் ஆகியோரை காலை கூட்டத்தில் வைத்து சக மாணவர்கள் முன்னிலையில் அதிபர் கே.எல்.ஏ. ஜௌபர் மற்றும் பிரதி அதிபர்கள் பாடசாலையின் கலாசார நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான ஆசிரியர் நாஸர் ஆகியோரினால் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இம்மாணவர்களைப் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர் எம்.எஸ்.எம்.ஸாகிர் மற்றும் சிரேஷ்ட அண்ணாவியார் ஏ.இஸ்ஸதீன் ஆகியோருக்கு பாடசாலையின் அதிபர் இதன போது தமது நன்றியைத் தெரிவித்தார்.

# 'தாசிம் ஹாஜியார் கோப்பை - 2026' பிரமாண்ட கால்பந்தாட்டத் தொடர் கோலாகலமாக ஆரம்பம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கிழக்கு மாகாணத்தின் முன்னணி 32 அணிகள் பங்கேற்கும் 'தாசிம் ஹாஜியார் கோப்பை - 2026' கால்பந்தாட்டத் தொடர், ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஏறாவூர் அஹமட் பரீட் மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமானது.

இத்தொடருக்கான முழுமையான அனுசரணையை ASIA COMMERCIAL FERTILIZER (PVT) LTD. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எல்.எம்.தாசிம் ஹாஜியார் வழங்கியுள்ளார். கிழக்கு மாகாணத்தில் கால்பந்தாட்ட வளர்ச்சிக்கும் இளம் வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கிலும் இந்தத் தொடர் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத், முன்னாள் இராஜாங்க அமைச்சர் செய்யித் அலி ஸாஹிர் மௌலானா, ஏறாவூர் நகர சபை தவிசாளர் நழீம், ஏறாவூர் நகர சபை உறுப்பினர் ரஜாய் ஜே.பி., AumsA அமைப்பின் உப தலைவர் மஹ்சூம், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன அதிகாரிகள், விளையாட்டு நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மற்றும்




பெருமளவான விளையாட்டு ரசிகர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.


அதிதிகள் வாகனப் பவனியாக அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து பாரம்பரிய வரவேற்புகளுடன் ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடக்கப் போட்டியில் தேசிய அளவில் புகழ்பெற்ற ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி (YSSC) அணி, ப்ரிலியண்ட் (BRILLIANT) அணியை 5–0 என்ற கோல் கணக்கில் அபாரமாக வீழ்த்தி தனது ஆதிக்கத்தை நிரூபித்து அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

கிழக்கிலங்கையின் கால்பந்தாட்ட வரலாற்றில் புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ள 'தாசிம் ஹாஜியார் கோப்பை – 2026', விளையாட்டு ஒற்றுமையையும் இளம் திறமைகளின் முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க தொடராக விளையாட்டு ஆர்வலர்களால் பாராட்டப்படுகிறது.

# 7 ஆம் திகதி திறந்து வைக்கப்படும் கந்தப்பொளை மஸ்ஜித் பலாஹ் பள்ளிவாசல்





**(பேருவளை - பீ.எம். முக்தார்)**

நுவரெலியா மாவட்டத்திலுள்ள கந்தப்பொளை தேயிலை மலை மஸ்ஜித் பலாஹ் பள்ளிவாசலின் நிர்மாணப் பணிகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகரும் பிரபல சமூக சேவையாளருமான கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் பங்களிப்போடு மேற்படி பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. இப்பள்ளிவாசளின் திறப்பு விழா 2026 ஆகஸ்ட் மாதம் 7 ம் திகதி வெள்ளிக்கிழமை (07.08.2026) காலை இடம்பெறும். கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இப்பள்ளிவாசளை திறந்து வைக்கவுள்ளார்.

# நாளை கருவிகளுடன் பொற்காலத்தை மீளமைக்கும் உஸ்பெகிஸ்தானின் புதிய மறுமலர்ச்சி:



**எழுதியவர்: ஃபஸ்ஹான் நவாஸ்**
**- செய்தி ஆசிரியர்**
**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**



மத்திய ஆசியாவின் மையப் பகுதியில் அமைதியானதொரு புரட்சி நடைபெற்று வருகின்றது. இது ஆயுதங்களால் நடத்தப்படும் புரட்சியல்ல் மாறாக பழங்கால ஏடுகள், அருங்காட்சியகங்கள் மற்றும் மைக்ரோசிப்கள் மூலம் முன்னெடுக்கப்படும் ஒரு அறிவுப் புரட்சியாகும். ஜனாதிபதி ஷவ்கத் மிர்சியோயேவ் (Shavkat Mirziyoyev) தலைமையின் கீழ், உஸ்பெகிஸ்தான் தன் இடைக்காலப் 'பொற்காலத்தின்' பெருமையை மீண்டும் நி லைநாட்ட உழைத்து வருகின்றது. அக்காலத்தில் சமர்கந்த் (Samarkand) மற்றும் புகாரா (Bukhara) ஆகிய நகரங்கள் உலகின் முன்னணி அறிவியல், கவிதை மற்றும் தத்துவ மையங்களாகத் திகழ்ந்தன. இந்த மீள்மலர்ச்சி முயற்சியின் விசேட அம்சம் என்னவெனில், ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொன்மைமிக்க பாரம்பரியத்தைப் பாதுகாக்கவும், புதுப்பிக்கவும், உலகிற்குப் பகிரவும் அதிபர் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறார்.

### முன்னோக்கிச் செல்ல பின்னோக்கிப் பார்க்கும் ஒரு தேசம்

நூற்றாண்டுகளுக்கு முன்பு, 'டிரான்சோக்சியானா' (Transoxiana) என்று அழைக்கப்பட்ட இப்பகுதி, வரலாற்றின் சிறந்த அறிஞர்கள் பலரை உருவாக்கியது. வானியலாளரான மன்னர் உலுக் பெக் (Ulugh Beg), சமர்கந்தில் ஒரு வானியல் ஆய்வகத்தைக் கட்டி, விண்மீன்களை வியக்கத்தக்க துல்லியத்துடன் வரைபடமாக்கினார். கொரேஸம்மின் (Khorezm) மாமூன் அகாடமியைச் சேர்ந்த அறிஞர்கள், ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்பே கணிதத்திலும் மருத்துவத்திலும் பெரும் மைல்கற்களை எட்டினர். அதிபர் மிர்சியோயேவ் பெரும்பாலும் இந்த வரலாற்றுச் சிறப்பைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறார். உலுக் பெக்கை வெறும் அறிவியலாளராக மட்டுமன்றி, அறிவுக்கு முன்னுரிமை அளித்த ஒரு சிறந்த ஆட்சியாளராகவும் அவர் புகழ்கிறார். நாட்டின் வரலாற்றில் இடம்பெற்றுள்ள இரு பொற்காலங்களைத் தொடர்ந்து, உஸ்பெகிஸ்தானை மீண்டும் அறிவு மற்றும் கலாச்சார மையமாக நிலைநிறுத்துவதற்கான இக்காலகட்ட முயற்சியை ஜனாதிபதி "மூன்றாவது மறுமலர்ச்சி" என்று குறிப்பிடுகிறார்.

இது வெறும் கடந்த கால நினைவலைகள் மட்டுமன்று அரசின் முதன்மைக் கொள்கையுமாகும். 2016-இல் பதவியேற்றதிலிருந்து, அதிபர் மிர்சியோயேவ் முன்னர் தனிமைப்பட்டிருந்த ஒரு நாட்டை உலகிற்குப் படிப்படியாகத் திறந்தார். வெளிநாட்டு ஆய்வாளர்களை வரவேற்றதுடன், விசா விதிகளையும் தளர்த்தி, உஸ்பெகிஸ்தானின் வரலாற்றையும் அதன் மக்களையும் உலகிற்கு மீண்டும் அறிமுகப்படுத்த அழைப்பு விடுத்தார்.



### நினைவுகளுக்கான நினைவுச் சின்னங்களைக் எழுப்புதல்

இந்த லட்சியத்தின் தெளிவான குறியீடாகத் தஷ்கண்டில் (Tashkent) இவ்வாண்டு ஒரு பிரம்மாண்ட மையம் உருவெடுத்துள்ளது: 40 நாடுகளைச் சேர்ந்த 1,500-க்கும் மேற்பட்ட நிபுணர்களின் பங்களிப்புடன் கட்டப்பட்டு, 2026 மார்ச் மாதத்தில் திறக்கப்பட்ட இஸ்லாமிய நாகரிக மையம் (Center of Islamic Civilization). இம்மையத்தில் இஸ்லாமிய உலகின் மிகச் சிறந்த பொக்கிஷங்களில் ஒன்றான 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'உத்மானி குர்ஆன்' (Uthman Qur'an) வைக்கப்பட்டுள்ளதுடன், ஆராய்ச்சி ஆய்வகங்கள், பழங்கால ஆவணப் பராமரிப்புப் பட்டறைகள் மற்றும் ஆவணக் காப்பகங்களும் அமைந்துள்ளன. இது ஏற்கனவே உலகின் மிக அழகிய புதிய அருங்காட்சியகங்களில் ஒன்றாகப் புகழப்பபட்டுள்ளது. பாரம்பரிய அருங்காட்சியகங்களைப் போல நிலையான காட்சிகளைக் கொண்டிராமல், பார்வையாளர்களை வரலாற்றுக்குள் நேரடியாக அழைத்துச் செல்லும் அதிநவீன, தொழில்நுட்ப வசதிகளுடன் இம்மையம் உருவாக்கப்பட்டுள்ளது.



இது ஒரு பெரிய திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே. உஸ்பெகிஸ்தான் 8,000-க்கும் மேற்பட்ட கலாச்சார பாரம்பரிய தளங்களைக் கொண்டுள்ளது. இதில் ஐந்து யுனெஸ்கோ (UNESCO) உலக பாரம்பரிய தளங்க-ளும் அடங்கும். இவற்றைப் பாதுகாக்க அரசாங்கம் ஒரு தனித்துவமான கலாச்சார பாரம்பரிய முகவரகத்தை உருவாக்கியுள்ளது. புகாரா நகரம் யுனெஸ்கோவின் 'இலக்கிய நகரம்' (City of Literature) அந்தஸ்-துக்கு விண்ணப்பித்துள்ளது. அத்துடன், 2025-இல் சமர்கண்ட் நகரம் யுனெஸ்கே-ாவின் பொது மாநாட்டை நடத்தியது — இது நாட்டின் சர்வதேச கலாச்சார அந்தஸ்து எவ்வளவு தூரம் உயர்ந்துள்ளது என்பதைக் காட்டும் ஒரு அரிய கௌரவமாகும்.



பழமையான நகருக்குள் நுழையும் செயற்கை நுண்ணறிவு

உஸ்பெகிஸ்தானின் இந்த அணுகுமுறையை வேறுபடுத்திக் காட்டுவது என்னவென்றால், செயற்கை நுண்ணறிவை வெறும் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றி, கலாச்சாரப் பாதுகாப்பிற்கான ஒரு கருவியாக ஏற்றுக்கொண்டமையாகும். நாடு முழுவதிலும் உள்ள அருங்காட்சியகங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு வருகின்றன: நுழைவு அமைப்புகள், காட்சிப்பொருட்கள் மற்றும் ஆவணச் சேகரிப்புகள் இணையத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றன. QR குறியீடுகள், மெய்நிகர் உலாக்கள் (Virtual tours) மற்றும் மொபைல் செயலிகள் மூலம் ஸ்மார்ட்போன் வைத்திருக்கும் எவரும் பல நூற்றாண்டு பழமையான பொக்கிஷங்களை அணுக முடியும். அரிய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகின்றன் இதனால் அசல் ஏடுகள் சிதையாமல் பாதுகாக்கப்படும் அதேவேளையில், எதிர்வரும் தலைமுறையினரும் அவற்றைக் கற்றுக்கொள்ள முடியும்.

சுற்றுலாத் துறையும் AI தொழில்நுட்பத்தால் மறுவடிவமைப்பு செய்யப்படுகிறது. புகாராவிற்கு வரும் ஒரு சுற்றுலாப் பயணி, தனது விருப்பத்திற்கு ஏற்ப வரலாற்று வழியை உருவாக்க AI செயலியைப் பயன்படுத்தலாம் - ஒரு பயணி 15-ஆம் நூற்றாண்டு வானியலை ஆராயலாம், மற்றொருவர் பட்டுப்பாதை (Silk Road) காலத்தைப் பற்றி அறியலாம். ஹோட்டல் வசதிகளை விரிவுபடுத்தி, மின்-விசாவை (e-visa) எளிமையாக்கியதன் மூலம், 2026-ஆம் ஆண்டில் 1.2 கோடி (12 Million) சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கான லட்சியத் திட்டத்திற்கு இத்தொழில்நுட்பம் வலுசேர்க்கிறது.

கலாச்சாரத்தில் AI தொழில்நுட்பத்தின் நெறிமுறைகள் சார்ந்த சர்வதேச உரையாடல்களிலும் உஸ்பெகிஸ்தான் முன்னிலை வகிக்கிறது. 2025-இல், யுனெஸ்கோ மற்றும் உஸ்பெகிஸ்தானின் கலை மற்றும் கலாச்சார மேம்பாட்டு நிதியம் இணைந்து சமர்கண்டில் அருங்காட்சியகங்களில் செயற்கை நுண்ணறிவின் பங்கு குறித்த சர்வதேச மாநாட்டை நடத்தின. பிரான்ஸ், யுனெஸ்கோ மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களை ஒன்றிணைத்து, மனித பாரம்பரியத்தை இடமாற்றம் செய்யாமல் தொழில்நுட்பம் எவ்வாறு சேவையாற்ற முடியும் என்பது குறித்து விவாதிக்கப்பட்டது. செயற்கை நுண்ணறிவின் நெறிமுறைகள் குறித்த ஆராய்ச்சியை அங்கீகரிக்கும் சர்வதேச விருதொன்றை நிறுவுவதற்கும் உஸ்பெகிஸ்தான் உதவியுள்ளது.

### இது ஏன் முக்கியமானது?

உலகின் மிக இளமையான மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நாட்டிற்கு - இங்கு சராசரி வயது 28-க்கு குறைவாகும் - இந்த பழைய மற்றும் புதிய தொழில்நுட்பங்களின் இணைப்பு மிக முக்கியமானதாகும். இது வெறும் கல் தூண்களையோ அல்லது மென்மையான காகிதங்களையோ பாதுகாப்பது பற்றியது மட்டுமல்ல் மாறாக, இளம் உஸ்பெக் மக்களுக்குத் தங்கள் தாய்நாட்டை உலகின் சிறந்த கற்றல் மையமாக மாற்றிய வரலாற்றுடன் ஒரு நேரடித் தொடர்பை ஏற்படுத்துவதாகும். வரலாற்றை நவீன கருவிகளுடன் இணைப்பதன் மூலம், பாரம்பரியமும் தொழில்நுட்பமும் எதிரிகள் அல்ல - அவை சிறந்த பங்காளிகள் என்பதை அதிபர் மிர்சியோயேவ் தலைமையிலான அரசு நிரூபித்து வருகிறது.

இந்த 'மூன்றாவது மறுமலர்ச்சி' தனது இலக்கை முழுமையாக எட்டுமா என்பது வரும் ஆண்டுகளில் மதிப்பிடப்படும். ஆனால் அதன் பயணம் சரியான திசையிலேயே செல்கிறது. உஸ்பெகிஸ்தான் தனது கடந்த காலத்தை சுற்றுலாப் பயணிகள் புகைப்படம் எடுப்பதற்காக மட்டும் தூசி தட்டி வைக்கவில்லை. உலுக் பெக், இப்னு சீனா (Ibn Sina) மற்றும் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த அறிஞர்களின் சாதனைகள் மறக்கப்படாமல், காலத்தில் உறைந்துபோகாமல், நாட்டின் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதை உறுதிசெய்ய அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தன் வரலாற்றை மீண்டும் உயிர்ப்பித்து வருகிறது.

# மண்கும்பான், வெள்ளக் கடற்கரை ஜூம்ஆ பள்ளிவாசலின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நடல்





யாழ்ப்பாணம், வேலணை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான், வெள்ளக் கடற்கரை ஜூம்ஆ பள்ளிவாசலின் மீள் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்கான அடிக்கல் நடும் விழா ஆகஸ்ட் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பள்ளிவாசல் வளாகத்தில் இடம்பெற்றது.
சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முளப்பரின் பிரதம பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் பிரதிநிதியாக ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் கலந்துகொண்டார்.
வெள்ளக்கடற்கரை ஜு/ம்ஆ பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் கட்டுமானக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட கிளைத் தலைவர் மௌலவி ஏ.எம்.அப்துல் அஸீஸின் (காஸிமி) கிராஅத்துடன் ஆரம்பமானது.
பள்ளிவாசல் பொருளாளர் எஸ். எச்.எம்.நியாஸின் தலைமையுரையைத் தொடர்ந்து, மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அ. அன்ரன் ஜேசுதாசன், கிராம மட்டத் தமிழ் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு விசேட உரையாற்றினார்.
இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.றஜீவன், க.இளங்குமரன், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.பைசல், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார், வேலணை பிரதேச செயலாளர் த.அகிலன் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர், கட்டுமானக் குழுவினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
அதிதிகளின் உரைகளைத் தொடர்ந்து, பள்ளிவாசல் மீள் கட்டுமானத்துக்கான அடிக்கல் நடும் பிரதான நிகழ்வு இடம்பெற்றது.

## கைப்பந்து [Handball] போட்டியில் கல்முனை ஸாஹிரா மீண்டும் தேசிய மட்டத்திற்குத் தெரிவு




**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

மட்டக்களப்பு வெவர் மைதானத்தில் இடம்பெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கைப்பந்து (Handball) சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான 17 மற்றும் 20 வயது பிரிவுகளில் சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தி 3ஆம் நிலையைப் பெற்று (2னெ சுரனெச ரி) மீண்டும் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
வெற்றி பெற்று அகில இலங்கை போட்டிக்கு தெரிவான மாணவர்களையும், இம் மாணவர்களை போட்டிக்காக சிறப்பாக பயிற்சியளித்து அழைத்துச் சென்ற பொறுப்பாசிரியர் எம். வை.எம் றகீப், எம்.எம். றஜீப், எஸ்.எம். உபைடீன் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான எம்.யூ.ஏ. சம்லி, ஏ.எம். ஜப்ரான் மற்றும் உடற்கல்வி பிரிவினர் ஆகியோரை கல்லூரியின் முதல்வர் எம்.ஐ. ஜாபீர் (SLEAS) இணைப்பாடவிதானத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர் எஸ்.முபாரக், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு (SDEC) மற்றும் பழைய மாணவர்கள் (OBA), பாராட்டி வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

## சிதம்பரா கணிதப் போட்டியில் மாத்தளை ஆமீனா மகளிர் கல்லூரி மாணவிக்கு தங்கப்பதக்கம்

**(பீ. எம். முக்தார் பேருவளை நிருபர்)**



மாத்தளை ஆமினா மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தரம் 7 மாணவி எம். எப். ஆய்ஷா ரய்பா கடந்த 25.07.26 அன்று வல்வெட்டித் துறையில் நடைபெற்ற 16 ஆவது அகில இலங்கை "சிதம்பர கணித விழா" போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்று அகில இலங்கை ரீதியில் 26 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டார்.
இம் மாணவி கணித ஒலிம்பியாட் போட்டியில் தேசிய மட்டத்திற்கு தேர்ச்சி பெற்றது மட்டுமின்றி விஞ்ஞான ஒலிம்பியாட் மேலும் பல இதர போட்டிகளில் தன் திறமையை தொடர்ந்து வெளிக்காட்டி வருகிறார். 2024 புலமை பரீட்சையிலும் சித்தி பெற்ற இவர் எஸ். எம்.பஸ்லீன், ஏ.எஸ். எப்.ரசானா ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும் ஆவார்.
இவரை பாடசாலை சமூகமும் நாமும் மேலும் கல்வியில் மிளிர வாழ்த்துகிறோம்.

## இடிந்து விழும் அபாயத்தில் தம்பலகாமம் தி/:ஆதிகோணேஸ்வரா மகாவித்தியாலயம்




**(ஹஸ்பர் ஹலீம்)**

திருகோணமலை மாவட்ட திருகோணமலை வலயக்கல்வி பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் தி/ஃஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடிந்து விழும் நிலையில் வகுப்பறை கட்டிடம் காணப்படுவதால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதன் மூலம் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இக் கட்டிடத்தின் ஒரு பகுதி ஏற்கனவே குடைசாய்ந்து காணப்படுகிறது.
இவ்வாறான நிலையில் இது குறித்து உரிய கல்வித்துறை சார் உயரதிகாரிகளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
இக் கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் பெரும் அச்சத்துடனேயே அருகாமையில் உள்ள மாணவர்களும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.
குறித்த பாடசாலையில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன் தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரை இங்கு காணப்படுகிறது.
எனவே கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாடசாலை மாணவர்களின் நலனை கொண்டு குறித்த கட்டிடத்தை திருத்தியமைத்தாவது தருமாறும் உரிய தரப்புக்களுக்கு பெற்றார்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தமிழறிஞர் சைமன் காசிச் செட்டியின் தகவல் கையேடு கையளிக்கும் நிகழ்வு



**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கற்பிட்டியில் பிறந்த தமிழ் ஆய்வுத்துறைப் பேரறிஞர் சைமன் காசிச் செட்டி இலங்கையின் முதலாவது சிவில் சேவையாளர் ஆவார். இவரின் வாழ்க்கை வரலாற்றை பின்னணியாக கொண்டு இவ் வருடத்திற்கான சாகித்ய விழா புத்தளம் மாவட்டத்தில் கொண்டாடப்பட உள்ளது.
இதன் நிமித்தம் தமிழறிஞர் சைமன் காசிச் செட்டி தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்குமாறு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கலாச்சார அபிவிருத்தி அதிகாரி எஸ்.ஏ.எஸ் சமரசிங்க விடுத்த வேண்டுகோளின் பேரில் செந்தமிழ்ச் செல்வி எனும் சஞ்சிகையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தமிழவேள் கந்தசுவாமி எழுதிய தகவல்களை சிங்கள மொழியில் மொழிபெயர்த்து கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கலாச்சார அபிவிருத்தி அதிகாரியிடம் கற்பிட்டி சைமன் காசிச் செட்டி பவுண்டேஷனின் ஸ்தாபகர் கலாபூஷணம் சமூக செயற்பாட்டாளர் ஜே. பத்மநாதன் திங்கட்கிழமை (27) கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கலாச்சார அபிவிருத்தி அதிகாரியின் அலுவலகத்தில் வைத்து கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.
இந் நிகழ்வில் கற்பிட்டி சைமன் காசிச் செட்டி பவுண்டேஷனின் உயர் பீட உறுப்பினர் ஓய்வு நிலை ஆசிரியர் கோ குணசேகரும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

அருவிக்கரை இலக்கியம் பேசும்



நாச்சியாரீவு பர்வீன்

# ஜப்பானிய மரணக் கவிதைகள்

**பஸ்லி ஹமீட்**

ஜப்பானிய மரபில், மரணம் ஒரு இயற்கை நிகழ்வு மட்டுமே. அதனை நோக்கிச் செல்லும் மனிதன், அதன் முன்னே அமைதியுடன் நிற்க விரும்புகிறான். இதனால்தான் ஜப்பானியர்கள் இடையே மரணக் கவிதைகள் எழுதும் பழக்கம் உருவானது. மரணக் கவிதைகள் ஜிசே நொகு (Jisei no ku)என்று அழைக்கப்படுகின்றன.

7ம் நூற்றாண்டில் இருந்து இந்த மரபு ஆரம்பமானது. முதலில் அரச வம்சத்தினர், சாமுராய்கள், பௌத்தத் துறவிகள் மற்றும் கவிஞர்கள், தங்களின் கடைசி தருணத்தில் தங்களின் உளஉணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் மரணக் கவிதைகளை எழுதினர்.

மரணத்தை அவலம் என்றோ, பயப்படத்தக்கதாகவோ பார்க்காமல், வாழ்க்கையின் ஒரு இயற்கையான நிகழ்வாகவே அவர்கள் அதை எடுத்துக்கொண்டனர். ஜப்பானியர்களைப் பொருத்தமட்டில் மனித வாழ்க்கை முஜோ (நிலையற்ற தன்மை) என்ற யாப்பை அடிப்படையாகக் கொண்டது. இன்றிருக்கும் மனிதன், நாளை இல்லை என்பதையே அது குறிக்கும்.

சாமுராய்கள் போருக்குச் செல்லும் முன்பு தங்கள் மரணக் கவிதைகளை எழுதினர். போரில் தாம் எப்போது இறப்போம் என்பதில் உறுதி இல்லாததால் அவர்கள் இறுதி "பிரிவு கடிதம்" போல இவற்றை எழுதினர். ஜென் துறவிகள் மரணக் கவிதைகளை தங்களின் கடைசி தியானமாக பார்த்தனர்.

இறுதிக்கணத்தில் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைப் புரிந்து கொள்ளும் ஒரு சாதனமாகவும் இயற்கை சுழற்சியில் ஒருவரின் மரணமும் ஓர் அங்கமாக பார்க்கப்பட வேண்டும் என்பதாலும் குடும்பம், சொத்துகள், உடல், உலகம் என அனைத்தையும் விட்டு நீங்கும் பிரிவின் அமைதியை வெளிப்படுத்தவும் இக் கவிதைகள் எழுதப்பட்டன.

மரணக் கவிதைகள் பொதுவாக ஹைக்கூ (5-7-5) அல்லது வாகா (5-7-5-7-7) வடிவத்தில் எழுதப்பட்டன. அவை மிகவும் சுருக்கமாகவும், தெளிவான இயற்கை உவமைகளுடன் எழுதப்பட்டன. மிகக் குறைந்த சொற்களில், வாழ்க்கையின் நிலையற்ற தன்மை, அழகு, விலகல் ஆகியவை சொல்லப்பட்டன. இக் கவிதைகள் நிலவு, பனித்துளிகள், உதிரும் இலை, காற்று போன்றவை சாமானிய வாழ்க்கையின் மாறுபாடுகளையும், வீழ்ச்சியையும் குறிக்கும் குறியீடுகளாகப் பயன்படுத்தப் பட்டன.

ஜப்பானியப் பெரும் கவிஞர்களின் மரணக் கவிதைகள்:

மட்சுவோ பாஷோ (Matsuo Bashō)

பயணத்தில் சுகமின்றி வீழ்ந்தேன்
உலர் வெளிகளை அலைகின்றன.
என் கனவுகள்

***

மாசாஃக்கா சிகி (Masaoka Shiki)

நோய் படுக்கையில்
வாசல் வழியே உள்ளே வருகிறது.
பூங்காற்று

***

சென் பௌத்த துறவி /கேன் (Shisui)

முகில் இல்லாத நிலவு
முழுமையான ஒளி,
நான் இல்லை.

***

ஹொசோ (Hōso)

வானிலும் இல்லை,
மண்ணிலும் இல்லை –
இருந்தாலும், பனித்துளிகள்
விழுகின்றன.

***

ஜோகான் (Jōhan)

ஒரு கடைசி தூறல்
காலைச் சூரியனில் கலந்திடும்
பனித்துளிகள்

இன்றைய ஜப்பானில் இந்த மரபு அதிகம் பயன்படுத்தப்படாமல் போயிருக்கலாம். இருப்பினும், சில கவிஞர்கள் மற்றும் கலைஞர்கள் இதைத் தொடர்ந்தும் செய்து வருகிறார்கள். அவை இன்றும் வாழ்க்கையின் சிறப்பை, உயிர்களின் இலக்கை நினைவுபடுத்தும் ஒரு அழகான முறையாகவே இருக்கின்றன. ஜப்பானிய மரணக் கவிதைகள் என்பது, உயிரின் கடைசி பயணத்தில் ஒரு அமைதியான குரல். வாழ்க்கை சொட்டுச் சொட்டாக மறைந்து விடும் நிலையை மிக நேர்மையாகவும் அழகாகவும் வெளிப்படுத்தும் இலக்கிய வடிவம்.

## படத்திற்கேற்ற கவிதை
### "காட்சியும் கவிதையும் - 2"

01)

உதவுவதன் வழி
உயிர்ப்பித்தன அன்பை
உயிர்களுக்குப் பாலமாய்ப் பயிரிட்டன நட்பை
நலவுகள் செய்தாலே
தோன்றிடும் நல்வினை

**பஸ்லா பர்ஸான்**
**காத்தான்குடி.**

02)

முதுகில் சுமை தாங்கும்
ஆமை பொறுமை காக்கும்
தலையில் அமர்ந்த பறவை
நட்பு பாடம் சொல்லும்

**நஸ்ரினா**
**நாரம்மல**

03)

உழைத்துப் பெற்றவனுக்கு
உரிமை கொண்டாட
முடியவில்லை!
உல்லாசமாகத் திரிந்தவன்
உருவி எடுப்பதுதான்...
உறைக்கிறது!

**பயாஸா பர்வீன்**
**பலகத்துறை.**

04.

சுயநலமற்ற நட்பின்
சுகமான பக்கமிது
தோள்கொடுத்து உதவும்
தோழமைகளாய்..
ஆமையும் கொக்கும்.

**நவீன்- நுவரலியா.**

05.

பகிர்ந்துண்ணும்
பக்குவம்
உயர்ந்த நட்புக்கு
உண்மையான சாட்சி

**ஷைனப் - மல்வானை.**

06

அடுத்தவன் உழைப்பை
அபகரித்துண்ணும்
இழிநிலை உயர்வில்லை
கொடுத்துண்ணும்
கொள்கை மானிடன்
மறந்த போதும்....

**பாத்திமா நஸீஹா**

## தொலைந்து போனேன்...



மாறாத மாற்றமாய்
மாறுகின்ற வாழ்வினில்
மாறிடும் மாற்றங்கள் பல

மகளெனும் உறவாய்
தாயை ஒட்டி
தந்தையை மெச்சி
தொலைந்தேன் முதலில்...

மனைவியாய் ஆகியே
கரம்பிடித்த கணவனோடு
இல்லறத்திலே இதமாகத்
தொலைந்தேன்
இரண்டாவதாய்...

தாய்மைக்குள் பிரவேசித்து
பிரசவித்த பிள்ளைகளுக்காய்
மனதால் தொலைந்தேன்
மூன்றாவதாய்...

இறையவனைச்
சிரம் பணிந்து
இதயம் நிறைந்தவளாய்
அடியாளாய்த் தொலைந்தேன் அடுத்ததாய்...

தொலைந்து போனதற்கு...
என் அகராதியில் அர்த்தம் தேடினேன்...

அது மொழிபெயர்த்த வார்த்தைகளோ
அன்பு பாசம் நேசம் காதல் என்பவையே...

**பஸ்லா பர்ஸான்**
**காத்தான்குடி**

## வெயில் பூசிய தனிமை



பொன்னிற வெயில் மரக்கிளையில் தவழ்கிறது
நீல நிழலாய் அவள் தனியே நடக்கிறாள்
மலர்கள் உதிர்ந்து பாதைக்கு அவளை வரவேற்கின்றன
அவள் இதயத்தில் ஆயிரம் எண்ணங்கள்
யாருக்காகவும் நிற்காத இந்த உலகில்
தனக்காகவே மட்டுமே பயணம் தொடர்கிறாள்
பசும்புல் மேல் அவள் நிழல் நீள்கிறது
சாலையின் இரைச்சல் அவளை தொந்தரவு செய்யவில்லை
உள்ளத்து அமைதிக்காக அவள் நடக்கிறாள்
வலியும் நம்பிக்கையும் சேர்ந்த ஒரு பயணம்
மரங்களின் சாட்சியோடு அவள் நடக்கிறாள் ..

**நஸ்ரினா ராசிக்**
**நரம்மல.**



## எதார்த்தம்...

பாடும் குயிலுக்கு
பாராட்டு விழா!
கூடு கட்டும் காகம்
துரத்தியடிக்கப்பட்டது!

**நன்கொடை நட்சத்திரம்**

## பெண்ணே போராடு

கனவுகளை சுமந்தபடி
விடியலை வரவேற்கிறாய்,
கடமைகளின் சுமையையும்
தோளிலே தாங்குகிறாய்.
வீட்டுக்குள் உன்னை
விதிகளின் சங்கிலி பூட்டினாலும்,
"மௌனமாய் இரு" என்ற
கட்டளைகள் மனதை
காயப்படுத்தினாலும்,
கண்ணீரை மறைத்தபடி
புன்னகையை மலரச் செய்கிறாய்,
காயங்கள் தந்த வேதனையிலும்
கருணையை விதைக்கிறாய்.
நாளை என்ற நம்பிக்கையை
நெஞ்சின் ஆழத்தில் பதிக்கிறாய்,
உறுதிகொள்கிறாய்.

உடைந்து போகாதே...
ஒருபோதும்
உள்ளம் தளராதே!
உரிமைக்கான உன் குரலை
உலகம் கேட்கச் செய்!
மலைபோல் தடைகள்
முன்னால் தோன்றும்
தகர்த்தெறிந்து முன்னேறு

அச்சத்தின் இருளை நீக்கிவிடு
அநீதிக்கெதிராய் போர்தொடு
நாளை உனக்கொரு முடிவு வரும்
நன்மை பயக்கும் விடிவு வரும்.



**சுமையா**
**நுககஹகெதர.**

## காட்சியும் கவிதையும் - 03



கீழே தரப்பட்டுள்ள படத்திற்கு சுருக்கமான ஒரு கவிதையை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம். சிறந்த கவிதைகள் பிரசுரிக்கப்படும். கவிதை எழுதுகின்றவர்கள் கட்டாயம் உங்களது பெயரினை குறிப்பிட தவற வேண்டாம். கவிதைகள் அனுப்பவேண்டிய Whats app இல. 0767877876.

## விதி...

சப்பாத்து அணிந்து
வரசொல்லி..
திருப்பி
அனுப்பப்பட்ட
மாணவன்..
கைது செய்யப்படுகிறான்
சப்பாத்துத் திருடனாக...!

**அனஸ்பரீட்**
**கல்ஹின்னை**



## அன்பான வாசகர்களே!

அருவிக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.

0767877876

# தேசிய ஆணைக்குழுக்களில் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## கலாநிதி முபிஸால் அபூபக்கர்

( எம்.என். எம்.அப்ராஸ்)

ஜனாதிபதியினால் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் மேலதிக தேர்தல்கள் ஆணையாளரான எம். கே.சமன் ஸ்ரீ ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளதுடன், எம்.பி.ரோஹண புஷ்பகுமார மற்றும் முன்னாள் அளவையாளர் நாயகமான கே. தவலிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், கிழக்கு மாகாண தொல்லியல் மரபுகளைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி முபிஸால் அபூபக்கர்,தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு என்பது நிர்வாக எல்லைகளை வரையறுக்கும் ஒரு



தொழில்நுட்ப அமைப்பு மட்டுமல்லமாறாக,நாட்டின் தேர்தல் பிரதிநிதித்துவம், அரசியல் சமநிலை மற்றும் ஜனநாயகப் பங்கேற்பு ஆகியவற்றைத் தீர்மானிக்கும் முக்கியமான சுயாதீன நிறுவனமாகும் என்றார். இலங்கை போன்ற பன்முக சமூக அமைப்பைக் கொண்ட நாட்டில், இவ்வாறான தேசிய நிறுவனங்களில் அனைத்து சமூகங்களினதும் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படுவது நல்லாட்சியின் அடிப்படைக் கோட்பாடாகும்.

குறிப்பாக முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் இம்முறை ஆணைக் குழுவில் இடம்பெறாதமை, அந்த சமூகத்தின் மத்தியில் கவலையையும் பல்வேறு கேள்விகளையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும்,தற்போதைய அரசின் அமைச்சரவையிலும் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாத நிலை தொடர்கின்றது. அதேபோன்று பல்வேறு தேசிய நிறுவனங்கள் மற்றும் முக்கிய நியமனங்களிலும் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் குறைந்து காணப்படுவது,அந்தச் சமூகத்தின் மத்தியில் தங்களுக்கான இடம் மற்றும் பங்களிப்பு குறித்து சந்தேக உணர்வை உருவாக்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவில் மூன்று பிரதான சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தமை,அந்த அமைப்பின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்திய ஒரு சிறந்த நடைமுறையாகும். குறிப்பாக சிறுபான்மை மக்கள் செறிந்து வாழும் மாவட்டங்களில் எல்லை நிர்ணயத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது, அங்குள்ள மக்களின் வரலாற்றுப் பின்னணி, மக்கள்தொகைப் பரவல், நிர்வாகத் தேவைகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் ஆகிய அனைத்தும் சமநிலையுடன் கருத்தில் கொள்ளப்படுவது அவசியமாகும்.

எனவே, எதிர்காலத்தில் தேசிய ஆணைக்குழுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் உயர்மட்ட நியமனங்கள் மேற்கொள்ளப்படும் போது, தகுதிக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு, நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கும் வகையில் அனைத்து சமூகங்களுக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறான அணுகுமுறையே அனைத்துச் சமூகங்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி, தேசிய ஒற்றுமையையும் நல்லாட்சியையும் மேலும் உறுதிப்படுத்தும் என்று கலாநிதி முபிஸால் அபூபக்கர் வலியுறுத்தினார்.

# ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளை மேம்படுத்த சமூக ஊடகங்களை பயன்படுத்துதல் தொடர்பிலான ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளை பாதுகாக்கவும் அதனை மேம்படுத்தும் நோக்கில் திருகோணமலையில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் ஆகஸ்ட் முதலாம் திகதி விழிப்பூட்டும் செயலமர்வொன்று இடம்பெற்றது.

சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் சமூக கவனத்தை ஈர்க்கும் வகையில் “எனது இணையம் எனது உரிமை” எனும் திட்டத்தின் ஊடாக நடாத்தப்பட்ட குறித்த நிகழ்வில் பிரதேச ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது இணையவழி மோசடி களை தடுத்தல் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக மக்கள் பிரச்சினைகளை கொண்டு செல்வதுடன் அரசியல் அமைப்பில் சொல்லப்பட்ட மனித உரிமைகள் மற்றும் அது தொடர்பான சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப் பட்டன.

எதிர்காலத்தில் சமூக ஊடகங்கள் மூலமாக விழிம்பு நிலை மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சமூக ஊடகங்கள் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

# கேகாலையில் சரத் பொன்சேகா தலைமையில் விஷேட நிகழ்வு





(பாரா தாஹிர்)

மனித உரிமைக்கான அமைப்பான ஆஸாத் மற்றும் உசுழீயு அமைப்பின் தலைவர் எம். எஸ். எம். ஸாதிக் அவர்களின் அணுசரனையில் பீல் மாஷல் சரத் பொன்சேகா அவர்களின் தலைமையில் விஷேட நிகழ்வொன்று கேகாலை ஹேஷானி ஹோட்டல் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

“பெருமை மிக்க நாடு மற்றும் தலைமுறை க்காக முன்னோக்கி செல்வோம் “என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற இவ் நிகழ்வில் பீல்ட் மாஷல் பொன்சேகா அவர்கள் உரையாற்றிய போது தற்போதைய அரசாங்க திட்டங்கள்,முயற்சிகள் திருப்பதி அளிப்பதாகவும் வருங்காலத்தில் கல்லம் கபடமற்ற மற்றும் ஊழல் அற்ற ஒரு குழு அடங்கிய எதிர் கட்சியை அமைக்க மக்கள் முன் வர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இவ் நிகழ்வில் கடியாபே அதுல தேரர், நடிகர் ஹேமந்த லியனகே ,சட்டத்தரணி லக்ஷ்மன் பேராசிரி, சஞ்சீவ ரணதுங்கா,தொழில் அதிபர் சேனபால ஆகியோர் உரையாற்றினர்.

# இளம் மாதர் முஸ்லிம் சங்கத்தின் [YWMA] அமைப்பின் 40ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நூல் வெளியீட்டு நிகழ்வும்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பெண்கள் மற்றும் தேவையுடைய ஏழைக் குடும்பங்கள், கணவனை இழந்த பெண்கள் அவர்களின் குழந்தைகள், நோயுற்று வருமானம் இல்லாமல் இருப்போர் என பல தரப்பினரதும் சமூக முன்னேற்றம், கல்வி, மனிதாபிமான சேவை மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய துறைகளில் நான்கு தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் YWMA (Young Women’s Muslim Association) அமைப்பின் 40ஆம் ஆண்டு நிறைவு விழாவும் நூல் வெளியீட்டு நிகழ்வும் 02ஆம் திகதி கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள Grand Zenith மண்டபத்தில் YWMA அமைப்பின் தலைவி தேஷமான்ய பவாஷா தாஹா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மலேசியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் பத்லி ஹிஷாம் ஆதம் (His Excellency Badli Hisham Adam) அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் விசேட அதிதிகளாக உயர் ஸ்தானிகரின் துணைவியார், சட்டத்தரணி என்.எம்.ஸஹீட், கிரேண்ட் செனித் உரிமையாளர் மாஹிர் ஹாஜியார், கொழும்பு டைம்ஸ் தலைவர் மொஹமட் ரசூல்தீன், கல்முனை முன்னாள் மாநகர பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பொருளாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷனின் ஸ்தாபகத் தலைவருமான ரஹ்மத் மன்சூர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், சமூக செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், புத்தி ஜீவிகள், தொழிலதிபர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் ஊடகவியாளர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இதன்போது நூல் விமர்சனத்தை சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் வழங்கினார். சட்டத்தரணி ஷஹீத், கிரேண்ட் செனித் உரிமையாளர் ஹமாஹிர் ஹாஜியார் மற்றும் பிரதம அதிதி மும் உரை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில், அமைப்பின் கடந்த 40 ஆண்டுகால சேவைகள், பெண்கள் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்பான பணிகள் மற்றும் எதிர்கால நோக்கங்கள் குறித்து சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நூருல் ஏன் நஜ்முல் ஹுஸைனால் எழுதப்பட்ட Our Growing Years எனும் அமைப்பின் நினைவு நூலும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

சமூக சேவையில் பெண்களின் வகிபாகம், கல்வி மேம்பாடு மற்றும் பெண்களின் தலைமைத்துவ வளர்ச்சிக்காக YWMA அமைப்பு கடந்த நாற்பது ஆண்டுகளாக ஆற்றி வரும் அர்ப்பணிப்புமிக்க சேவைகளைப் போற்றும் வகையில் வரலாற்று நிகழ்வாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது நீண்ட காலம் சேவையாற்றியவர்களுக்கும் அதிகளுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று தசாப்தங்களுக்குப் பின் முதன்முறையாகக் காய்த்த ஈச்சம் பழங்கள்: பள்ளிவாசல் நிர்வாகம் சிறப்பு நன்கொடை விற்பனை அறிவிப்பு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் ஒலுவில் மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ஒலுவில் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் வளாகத்தில் நடப்பட்டிருந்த பேரீச்ச மரத்திலிருந்து முதன் முறையாகப் பேரிச்சம் பழங்கள் அறுவடை செய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

சுமார் மூன்று தசாப்த கால நீண்ட காத்திருப்புக்குப் பிறகு பள்ளிவாயல் வளாகத்தில் காய்த்துப் பழுத்துள்ள இந்த அருள் நிறைந்த பேரீச்சம்பழங்கள் ஊர் மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2019.02.04 ஆம் திகதி, நாட்டின் 71 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒலுவில் BSD (2002 - O/L) அமைப்பின் ஏற்பாட்டில் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் நிர்வாகத்தின் ஆலோசனைக் கமைய சுமார் 10 பேரீச்ச மரங்கள் நடப்பட்டன.

அதில் ஒரு மரத்தில் காய்த்துப் பழுத்த அருள்மிக்க பேரீச்சம் பழங்கள் இன்று வெற்றிகரமாக அறுவடை செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், ஊர் பொதுமக்கள் மற்றும் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இன்று (31) ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 5 பழங்கள் கொண்ட ஒரு பைக்கட் (Packet) ரூபா 1,000/- எனும் நன்கொடை அடிப்படையில் பள்ளிவாயலின் வளர்ச்சிக்காக விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.சுமார் மூன்று தசாப்தங்கள் கடந்து, பள்ளிவாயல் வளாகத்தில் விளைந்துள்ள இந்த அருள் நிறைந்த பேரிச்சம்பழங்களை ஊர் மக்கள் சுவைத்து மகிழ வேண்டும் என்ற உயரிய நோக்கில் பள்ளிவாயல் நிர்வாகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

எமது ஊர் மண்ணில் இறைவனின் மாளிகையிலேயே காய்த்துப் பழுத்த இந்த அருள்மிக்க பேரிச்சம் பழங்களை பள்ளிவாயலின் வளர்ச்சிக்கான மேலான நன்கொடைகளைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். குறைந்த அளவிலான பழங்களே உள்ளதால் முந்துபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என ஒலுவில் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் நிர்வாகம் கேட்டுள்ளது.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு கென்ய நாட்டின் முன்னாள் தூதுவர் விஜயம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பௌதீக வள அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடுவதற்காக செல்வந்தரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும் கென்ய நாட்டின் முன்னாள் தூதுவருமான எச்.எம்.பாறூக் விஜயமொன்றை மேற்கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் அழைப்பின் பேரிலே கென்ய நாட்டின் முன்னாள் தூதுவர் மற்றும் அவரது மகன் ஆகியோர் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஏ.எம்.நௌஸாத் தலைமையில் இடம்பெற்றதுடன் இப்பாடசாலை பெண்கள் மாத்திரம் கல்வி கற்கும் பாடசாலை என்பதோடு, வருடா வருடம் சிறந்த பெறுபேற்றை ஈட்டித்தரும் பிரபல பாடசாலை யாகவும் கல்முனை பிரதேசத்தில் திகழ்கின்றது.





கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கடந்த கால ஆட்சியாளர் களால் எவ்வித அபிவிருத்திகளும் செய்யப்படாதிருந்த இப்பாட சாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா அவர்களது முயற்சியினால் கென்ய நாட்டின் முன்னாள் தூதுவர் எச்.எம். பாறூக் மற்றும் அவரது மகன் தொழிலதிபர் சாமில் பாறூக் ஆகியோரின் வருகை மூலமாக 02 ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைத்து தருவதற்கு இதன் போது ஒப்புதல் வழங்கப்பட்டது.

பின்னர் இவர்களது வருகையின் நினைவாக பாடசாலை வளாகத்தில் மர நடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

இதேவேளை விசேட தேவை யுடைய மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையான சாய்ந்தமருது அல்ஜலால் பாடசாலைக்கு சுற்று மதில் அமைப்பதற்காக ஏழு இலட்சம் ரூபாய் நிதி வழங்குவதற்கும் இவர்களினால் இணக்கம் காணப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தெரிவித்தார்.

ஆசிரியைகள், மாணவிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 'தினச் சுடர்' தேசிய விருது விழா: முதற்கட்டமாக 20 ஆளுமைகளுக்கு தேசிய விருதுகள்

( அஷ்ரப் ஏ.சமத், ஐ. ஏ. காதிர் கான் )

'தினச்சுடர்' பத்திரிகையின் தேசிய விருது வழங்கும் நிகழ்வு, உலமாக் கட்சித் தலைவர் அஷ்ஷெய்க் முபாறக் அப்துல் மஜீத் தலைமையில், கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ஹாஷிம் உமர் பௌண்டேஷன் தலைமையகத்தில், கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையன்று வெகு சிறப்புற நடந்தேறியது.

இதன்போது, ஊடகத்துறை மற்றும் கலைத்துறை ஆகியவற்றில் பங்களிப்புச் செய்யும் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பிரிவுகளைச் சேர்ந்த 20 ஆண் பெண் ஆளுமைகள், 'தினச்சுடர்' தேசிய விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டப்பட்டு கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக, ஹாஷிம் உமர் பௌண்டேஷன் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் கலந்து கொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.







'தமிழன்' பத்திரிகை இணை ஆசிரியர் ஏ.எம். ஜௌபர், பௌண்டேஷன் பணிப்பாளர் மரியம், 'சுயாதீன தொலைக்காட்சி' தமிழ்ச் செய்திப் பிரிவு முன்னாள் செய்தி முகாமையாளர் சித்தீக் ஹனீபா, 'இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை' முன்னாள் மேலதிக பணிப்பாளர் எம்.இஸட். அஹமட் முனவ்வர், சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேதா, பௌண்டேஷன் ஒருங்கிணைப்பாளர்களான ஆகிப் மொஹமட், இஸ்ஸத் மற்றும் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட ஆர்வலர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# ரிதீகம வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு திறப்பு



(மாத்தளை எம்.சஹூர்தீன்)

கிராமப்புற மக்களின் சுகாதார தேவைகளை மேம்படுத்து நோக்கில் அரசினால் முன்னெடுக்கப்படும் வேலை திட்டத்திற்கமைய F/ ரிதிகம பிரதேச வைத்தியசாலை யின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப் பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட தேசிய மக்கள் சக்தி குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் கே எம் அஸ்லம் இதனை திறந்து வைத்த பின் அங்கு அவர் உரையாற்று வதையும் ரிதிகம பிரதேச சபை தலைவர் மற்றும் சுகாதார அதிகாரிகள் பலரையும் படத்தில் காணலாம்.

# கற்பிட்டி வரலாற்றில் முதலாவது புதுக் கவிதை நூலான பனை வீரன் வெளியீட்டு விழா உதயம் ஊடக அனுசரணையில் சிறப்பாக இடம்பெற்றது








(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி தியாகராஜா மகேந்திர பாஸ்கர் எழுதிய புதுக் கவிதை நூலான பனை வீரன் கற்பிட்டி வரலாற்றில் வெளிவந்த முதலாவது புதுக் கவிதை நூலாகும் .

கற்பிட்டி நஷ்ர் பவுண்டேஷன் வெளியீட்டுள்ள இக் கவிதை நூலின் வெளியீட்டு விழா வெள்ளிக் கிழமை (2026/07/24) நஷ்ர் பவுண்டேஷன் தலைவர் எம்.ஏ.சீ.ஏ முத்தலிப் தலைமையில் கற்பிட்டி அக்ஷரா வரவேற்பு மண்டபத்தில் உதயம் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற முன்னாள் புத்தளம் வலய கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.டி.எம் பைரூ சமான் கலந்து கொண்டதுடன் விஷேட விருந்தினராக ஓய்வு பெற்ற முன்னாள் கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல் நூஹூ லெப்பை கலந்து கொண்டார் அத்தோடு கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர்களான கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் கடமையாற்றிய எம்.பீ.எம் றோஸ் புஹாரி, மௌலவி எம்.ஏ.சீ இப்றாஹீம், கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையில் கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர்களான எஸ் எம் ஐயூப், எம்.ஐ.எம் அஷ்ரபு அலி, கற்பிட்டி முகத்துவாரம் முஸ்லிம் வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் எஸ்.ஐ.எம் ஆஸ்தீன் குறிஞ்சிப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர் ஏ.எச்.எம் கலாம், நாவக்காடு ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர் எஸ்.எம் நியூட்டன், கற்பிட்டி ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர் டப்ளியூ.பீ சஹீலா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கற்பிட்டி தியாகராஜா மகேந்திர பாஸ்கர் எழுதிய முதலாவது கவி பிரசவமாக வெளியீடப்பட்ட பனை வீரன் கவிதை நூலின் திறனாய்வு கவிஞரும் புத்தளம் ஐ. மீடியா நெட்வொர்க் நிறுவனத்தின் பணிப்பாள ருமான எஸ்.ஏ.சீ.பீ மரைக்காரின் பார்வையில் சிறப்பாக இடம் பெற்றது.

முதல் பிரதி நூலாசிரியரின் தாயான சின்னய்யா அமராவதிக்கு மகன் நூலாசிரியர் கவிஞர் தியாகராஜா மகேந்திர பாஸ்கர் வழங்கி வைத்தார்.

கவிஞர் தியாகராஜா மகேந்திர பாஸ்கரின் பனை வீரன் புதுக் கவிதை நூலை தொகுத்த கற்பிட்டி சிரேஷ்ட ஊடகவியலாளர் எம் எச் எம் சியாஜ் கவிஞர் தியாகராஜா மகேந்திர பாஸ்கரை வாழ்த்தி எழுதிய வாழ்த்து பா நினைவுச் சின்னம் வழங்கியதுடன் கிராம உத்தியோகத்தர் எம் பீ எம் அர்ஷத் பொன்னாடை போர்த்தி கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 106



# “நீயாகத் தேர்ந்தெடுத்தாய், நீயாக அனுபவி”

“இன்பமோ துன்பமோ, அந்த வாழ்கைக்கு முகம் கொடுத்தே ஆக வேண்டும்...
ஏனெனில் அதைத் தேர்ந்தெடுத்தது அவள்தானே.” இப்படி சொல்லக் கேட்டிருப்போம்.
வெளிப்பார்வைக்கு இது ஒரு தைரியமான வாக்கியம் போலத் தெரியும். ஆனால் உள்ளே சென்றால், இதில் ஆறுதலும் இருக்கிறது, குத்தலும் இருக்கிறது. இதற்குள் சில யதார்த்தங்கள் மறைந்துள்ளன.
அது பற்றி சற்று ஆராய்ந்து புரிந்து கொள்வோம்.

யதார்தம்: 1
பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்
“நீதானே தேர்ந்தெடுத்தாய்” என்ற வரி முதலில் பொறுப்பை நினைவூட்டுகிறது.
உளவியலில் இதனை அறிவாற்றல் முடிவு என்பர். நிச்சயற்ற நிலையைத் தவிர்த்து, ஒரு தெளிவான பதிலையோ அல்லது முடிவையோ அறியத் தூண்டும் மனநிலையாகும்.
இது நடந்ததை மாற்ற முடியாது என்பதை மனம் ஏற்றுக் கொள்ள, தனக்குத்தானே ஒரு காரணத்தைத் தருகிறது.
இது ஒருபுறம் தைரியத்தைத் தருகிறது.
மறுபுறம் தன்னையே கட்டிப்போடும் சங்கிலியாகவும் அமைந்துவிடுகிறது.

யதார்தம்: 2
சமூகத்தின் அழுத்தம்
நமது சமூகத்தில் ஒரு பெண் ஒரு முடிவை எடுத்துவிட்டால், அது சரியோ, தவறோ “அதை அனுபவித்துதான் ஆக வேண்டும்” என்ற குரல் சில சமயம் எழும்.
குடும்பம், உறவுகள், ஊர் பேச்சு எல்லாம் சேர்ந்து “திரும்பிச் செல்ல வழியில்லை” என்ற சுவரை ஷ எழுப்பிவிடும்.
அதனால் வெளியே “பரவாயில்லை, நான் பார்துக்கொள்கிறேன்” என்று சிரித்தாலும், உள்ளுக்குள் ஏக்கமும், குற்றவுணர்வும், “வேறு வழி இருந்ததா?” என்ற கேள்வியும் ஓடிக்கொண்டே இருக்கும்.

யதார்தம்: 3
இன்பமும் துன்பமும் கலந்த வாழ்க்கை
எந்த வாழ்கையும் முழுக்க இன்பமாகவோ, முழுக்க துன்பமாக வோ இருப்பதில்லை.
ஒரே வீட்டில் சண்டையும் இருக்கும், சந்தோசச்

சிரிப்பும் இருக்கும்.
ஒரே உறவில் வலியும் இருக்கும், ஸ பாதுகாப்பும் இருக்கும்.
ஆகவே “முகம் கொடுக்க வேண்டும்” என்பது வலியை மறுப்பதல்ல. வலியோடு சேர்ந்து வாழ கற்றுக் கொள்வதுதான்.

யதார்த்தம் 4
சொல்லப்படாத பக்கம்
சில நேரம் இந்த வார்தையைச் சொல்பவர்கள் தமக்குத்தாமே சொல்லிக்கொள்கிறார்கள்.
சில நேரம் பிறர் ஆறுதலுக்காகச் சொல்கிறார்கள்.
ஆனால் சில நேரம் இது மறைமுகக் குற்றச்சாட்டாக மாறிவிடுகிறது.
“நீயாகத் தேர்ந்தெடுத்தது, நீயே அனுபவி” என்ற தொனி அதில் ஒலிக்கும்.
ஆகவே இந்த வாக்கியத்தின் ஆபத்து என்னவென்றால், அது ஒரே நேரத்தில் மருந்தாகவும் விஷமாகவும் இருக்கிறது என்பதுதான்.

இறுதி யதார்தம்:
வாழ்க்கை என்பது ஒருமுறை எடுத்த முடிவல்ல. அது ஒவ்வொரு நாளும் மீண்டும் மீண்டும் எடுக்கப்படும் தேர்வு.
நேற்றைய முடிவுக்காக இன்று முழுவதும் தண்டனை அனுபவிக்க வேண்டியதில்லை.
“இதுதான் என் வாழ்கை” என்று ஏற்றுக் கொள்வதற்கும், “இதனை இன்னும் சிறப்பாக வாழ்வேன்” என்று முயற்சிப்பதற்கும் இடையில்தான் உண்மையான வாழ்கை இருக்கிறது.
சிலர் இதனைக் கடந்து பெரிதாக வருவார்கள். சிலர் இதனுடனேயே அமைதியாக வாழப் பழகிவிடுவார்கள்.
இரண்டுமே தவறல்ல.




**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**





**பயாஸா பாஸில்**

ஒவ்வொரு பிள்ளையும் மாணிக்கக் கல்லே தவிர வேறில்லை.
அந்த மாணிக்கங்களைப் பாதுகாப்ப தும் நம் கையில்தான் உள்ளது.
அந்த மாணிக்கக் கற்களைச் சிதறவிடுவதும் நம் கையில்தான் உள்ளது.
எல்லாப் பிள்ளைகளும் நல்ல பிள்ளைகளாகப் பிறக்கிறார்கள்.
அவர்கள் தவறான வழியில் செல்வதும், நேர்மையாக வாழ்வதும் முதலில் பெற்றோரின் வாழ்வையும், பேச்சையும் பார்த்தே கற்றுக் கொள்கிறார்கள்.
சில தாய்மார–கள் தங்கள் பிள்ளைகள் நன்றாக வளர வேண்டும் என்று இரவு பகல் பாராமல் சிந்திப்–பார்கள்.
பொருத்தமான பள்ளிகளில், நல்ல ஆசிரியர்களிடம், நல்ல சூழலில் கல்வி கற்க வைப்பார்கள்.
ஏனென்றால், ஒரு பிள்ளையின் எதிர்காலம் என்பது வெறும் புத்தகம் மட்டுமல்ல.
அது வீட்டில் கிடைக்கும் அன்பிலும், ஒழுக்கத்திலும், துஆவ–லும் தான் உருவாகிறது.
பெற்றோரின் ஒரு வார்த்தை பிள்ளையின் வாழ்வை மாற்றும்.
பெற்றோரின் ஒரு முன்மாதிரி பிள்ளையின் குணத்தை வடிவமைக்கும்.
எனவே நம் மாணிக்கங்களை பத்திரமாக பார்துக்கொள்வோம்.
அவர்களை நல்லவர்களாக, சமுதாயத்திற்கு பயனுள்ளவர்களாக வளர்ப்போம்.
அல்லாஹ் அனைத்து பிள்ளைகளை யும் ஸாலிஹானவர்களாக ஆக்குவானாக. ஆமீன்





பாத்திமா சர்மிளா
ஆலிமா முஅஸ்கரிய்யா


**அன்பான வாசகர்களே!**

**அழகு மற்றும் பேஷன் ஆரோக்கியம், கல்வி, மன நலம், சமையல், வீட்டு முகாமைத்துவம் , தொழில், சுய முன்னேற்றம், சமூக விழிப்புணர்வு, கலாசாரம், பொழுது போக்கு போன்ற உங்கள் ஆக்கங்களை மங்கையொளி பக்கத்துக்கு அனுப்புங்கள்.**

0775486616

# சன்மார்க்கத்துக்காக சகலரோடும் இணைந்து செயல்பட்ட யுகப்புருஷர்

கண்ணியம்மிக்க உலமாவாக, ஒரு பாடசாலை ஆசிரியராக,பள்ளிவாசல் இமாமாக மட்டுமன்றி பிரதம கதீபாக, அரபுக்கல்லூரியின் அதிபராக,தேசிய கல்வி நிறுவனத்தின் பாடநூல் ஆசிரியராக,வானொலியின் பிரபல சன்மார்க்கப் பேச்சாளராக,பன்நூலாசிரியராக மேலும் அகில இலங்கை ஜாமியதுல் உலமாவின் தேசிய தலைவராக இருந்து இலங்கை முஸ்லிம்களுக்கு அரும்பணியாற்றிவர் அஷ்ஷெய்க் அஹ்மத் முபாரக் ஆலிம் ஆவார்.இவர் தமிழ்,சிங்களம்,ஆங்கிலம், அரபு,உருது முதலான பன்மொழிகளிலும் புலமை மிக்கவர்.மண்வளம் மிக்க,எழில்மிகு மல்வானை என்ற முஸ்லிம் கிராமத்தில் 1949 ஆண்டு ஜுலை 5ஆம் திகதி பிறந்த இவர் அஷ்ஷெய்க் மஹ்தூம் ஆலிம் உம்மு ரஹீமா தம்பதியினரின் ஆறாவது பிள்ளை யாவார்.ஹல்வான் மாஸ்டர்,மன்சூர் டாக்டர் மற்றும் இன்னும் மூன்று சகோதரிகளின் கடைசித் தம்பியாவர்.

மல்வானை அல்-முபாரக் தேசிய கல்லூரியில் தனது பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தாலும் அதற்கு முன்னரே தந்தை மஹ்தூம் ஆலிமிடம் சன்மார்க்கக் கல்வியை கற்றுக் கொண்ட இவர் 8ம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திஆன்மீகக் கல்வியை தொடர்ந்த போதிலும் பாடசாலையிலும் இவர் சிறந்த மாணவர் என்ற முத்திரையை பதித்தார்.

இவரது தாய் மாமன் மர்ஹூம் அத்துடன் தினகரன் ஆசிரியர்களுள் ஒருவராக இருந்த ஏ.எல்.எம்.கியாஸ் இவரது கல்வி வளர்ச்சிக்காக வழிகாட்டியவரில் ஒருவராவர்.

தனது மகன் ஓர் சிறந்த ஆலிமாக வரவேண்டும் என்ற இலட்சியப்போக்குடைய தந்தை மஹ்தூம் ஆலிம் அவர்கள் 1963ம் ஆண்டில் தனது மகன் அஹ்மத் முபாரக்கை மகரகம கபூரியா அரபுக்கல்லூரியில் சேர்த்து விடுகிறார்.தந்தை மஹ்தூம்ஆலிம் ஒரு காலத்தில் மல்வானையில் இயங்கி வந்த கிதாப் மதரசாவின் அதிபராக செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவன் முபாரக் அரபுக்கல்லூரியில் கற்கும் காலத்தில் ஒழுக்கத்திலும் சமூகநெறி முறைகளிலும் சிறந்து விளங்கியதால் உஸ்தாத்மார்களிடமும் சக மாணவர்கள் மத்தியிலும் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றுக்கொண்டார்.அநாவசிய விடயங்களில் ஈடுபாடு காட்டாது தனது கல்வியிலே அதீத கரிசனை காட்டி வந்தார்.

இளமைப்பருவம் முதல் அவரது தந்தையின் சீரான வழிகாட்டலில் வளர்க்கப்பட்ட அஷ்ஷெய்க் முபாரக் அவர்கள் தனது தந்தையின் பயிற்சிப்பாசறையின் கலங்கரை விளக்காக காணப்பட்டார்.

மகரகம கபூரியா அரபுக் கலாசாலையில் சன்மார்க்கக் கல்வியைப் பூர்த்தி செய்த இவர் 1970ம் ஆண்டு பண்டாரவளை ஜும்மா மஸ்ஜிதின் பிரதம இமாமாக பொறுப்பேற்றுக் கடமை புரிகிறார்.இவரது பன்முக ஆற்றலுக்கும் அர்ப்பணிப்புமிக்க சேவைக்கும் அப்பிரதேச மக்கள் இன்றுவரை சாட்சி பகர்கின்றனர்.

மேலதிக் கல்விக்காக மதீனா அல் முனவ்வரா பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி பயணத்தை தொடர்ந்தார்.

இவரின் தஃவாவுக்கான அணுகுமுறையானது நேரடியான நெறிமுறைகளைப் பேணிய வகையிலே அமைந்திருந்தது.

எந்த ஒரு குத்பா உரையையும் முழுமையாகத் தொகுத்து பலமுறை நெறிப்படுத்தி அதை எழுத்து வடிவில் தயாரித்த பின்னரே குத்பா பேருரையை மேற்கொள்பவராகக் காணப்பட்டதுடன் இன்னும் வேற்றுமையான சர்ச்சையான விடயங்களையும் தவிர்த்துக் கொண்டார்.

சமூக நலன் மற்றும் ஒற்றுமை என்பவற்றுக்கு முன்னுரிமை அளித்து அதிக அக்கறையுடன்



அஷ்ஷெய்க் அஹ்மத் முபாரக் ஆலிம்

செயல்படுபவராகவும் காணப்பட்டார்.

இவர் 1971ல் மௌலவி ஆசிரியர் நியமனம் பெறுகிறார்.1973வரை மினுவன்கொட கல்லொலுவ மத்திய கல்லூரி மற்றும் திஹாரிய தாருஸ் ஸலாம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் சேவையாற்றினார்.

1981 ஆம் ஆண்டில் கபூரிய்யாவின் அதிபர் பொறுப்பை ஏற்றது முதல், சுமார் 32 வருடங்கள் அதிபராக இருந்து அதன் வளர்ச்சிக்காக உழைத்தார்கள். அத்துடன், ஜாமிஆ நளீமிய்யாவில் பகுதி நேர விரிவுரையாளராக இரண்டரை வருடங்கள் கற்பித்தல் பணியிலும் ஈடுபட்டார்கள்.

மதீனாப் பட்டதாரிகளின் தலைவராக, இஸ்லாமிய வங்கிகளில் ஷரீஆ ஆலோசகராக, பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவராக, தேசிய கல்வி நிறுவனத்தின் இஸ்லாம் பாடப்புத்தக எழுத்தாளராக, சோனக கலாச்சார அமைப்பின் உறுப்பினராக, தொண்டு நிறுவனங்களின் மூலம் சமூகத்திற்குப் பணியாற்றுபவராகவும் தடம்பதித்தார்கள்.

பக்கபலமாக நின்று இரவு பகலாக ஜம்இய்யாவுக்காக அரும்பாடுபட்டார்கள்.

இறுதியாக சுகயீனமுற்றிருந்த போது, தனது பிள்ளைகளிடம், தனது நூலகத்தில் உள்ள பெறுமதியான அனைத்து கிதாபுகளையும் ஜம்இய்யாவின் நூலகத்திற்கு வக்ஃப் செய்து விடுங்கள் என்றும், சொந்த தேவைகளுக்காக ஜம்இய்யாவின் பொருட்கள் (பேனை, காகிதாதிகள்) பாவிக்கப்பட்டிருக்கலாம் எனவே, ஒரு தொகைப் பணத்தையும் கொடுத்து விடுங்கள் என்றும் வஸிய்யத் செய்துள்ளார்கள் இது அன்னார் ஜம்இய்யா மீது வைத்திருந்த அன்னாரது அன்பிற்கு அடையாளம் என்பதுடன். சிறந்த பேணுதலுக்கான எடுத்துக்காட்டும் ஆகும்.

அன்னாருடன் பழகிய உலமாக்கள் அவர்களின் வாழ்வில் காணக்கிடைத்தவை தொடர்பாக இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:-

தொழுகையில் பேணுதல்: ஜமாஅத் தொழுகையில் அதிகூடிய கவனம் செலுத்தியதுடன், முன்பின் ஸுன்னத் தொழுகைகளையுட பேணுதலுடன் தொழுவார்கள். தஹஜ்ஜுத், வித்ரு மற்றும் லுஹாத் தொழுகைகள் கூடத் தவறுவது கிடையாது.புன்முறுவல் மலர்ந்த முகத்துடன் அறிமுகமான, அறிமுகமற்ற அனைவருடனும் பழகுவார்கள்.

* பிறரை மதித்தல்: எல்லோரையும் மதித்து, முக்கியத்துவத்துடன் பேசுவார்கள்சுகம் விசாரிப்பார்கள்.
* வீண்பேச்சு கிடையாது: வீண்பேச்சுகள் பேச அவர்களுக்கு விருப்பமும் இல்லை அவற்றிற்காக நேரமே இருக்கவில்லை.
* சிறந்த பேச்சாளர்: நன்றாக சிந்தித்து தடுமாற்றமில்லாத சிறந்த பேச்சாளர்

தயாளகுணம்: ஒரு முறை (1980 களில்) ஜம்இய்யாவின் முக்கிய வழக்கொன்றுக்கு சென்றுவிட்டு வழக்கறிஞருக்கு செலுத்த, தனது குடும்பச் செலவுக்காக வைத்திருந்த பணத்தை வழங்கியுள்ளார்.

சமாதானப் பிரியர்: பொதுவாக சமூகத்தில் சமாதானத்தை விரும்பி முயற்சித்ததுடன், தனது குடும்பத்தின் மத்தியில் திருமண மற்றும் குடும்ப வாழ்வில் ஒரு மத்தியஸ்-தராகவும் பிரதம ஆலோசகராகவும் திகழ்ந்-தார்கள்.

* ஸுன்னாவில் பற்று : மார்க்க விடயங்களில் விட்டுக் கொடுக்காத இவர்கள், ஸுன்னாவுக்கு முரணாக செயற்படுவதை விரும்புவதே இல்லை.
* மதீனாவின் மீதுள்ள பற்று: சென்ற 2019 டிசம்பர் மாதத்தில் மனைவியுடன் உம்ராவுக்குச் சென்ற அவர்கள், ஒவ்வொரு பிள்ளையின் பெயரையும் குறிப்பிட்டு, வஸிய்யத்து எழுதிவிட்டுச் சென்றார்களாம். அதுவே அவர்களின் இறுதி வஸிய்யத்தாக அவர்களது பிள்ளைகளால் கருதப்பட்டுள்ளது. அத்துடன், மதீனாவில் அடக்கம் செய்யப்படுவதை மிகவும் விரும்பியிருந்தார்களாம்.

அவர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள், உரைகள்,ஹஜ்ஜும் அதன் விதிமுறைகளும், ஜனாஸாவும் அதன் சட்டங்களும்,இத்தாவும் அதன் விதிமுறைகளும், பள்ளிவாசல்களின் சட்டதிட்டங்கள் காதியானிஸம்,துஆ ஒழுங்குகளும் விதிமுறைகளும்,செரன்தீப் கண்ட சான்றோர்கள் என்பனவாகும் 200க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.இன்னும் 7 இற்கும் மேற்பட்ட சர்வதேச மாநாடுகளில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் 1980 முதல் 1994 வரை இஸ்லாமிய சட்ட வரையறை - ஷரீஆத் தொடர் பேச்சு, ஹஜ் விளக்கம் போன்ற நிகழ்ச்சிகளால் நேயர்களின் மனதை வென்ற வானொலிப் பேச்சாளராவார்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் ஊழியர்களின் வாக்குமூலம்

உயர் பண்புகள்,அர்ப்பணிப்புகளுடன் பணிபுரிந்த ஓர் ஆளுமை.

முஸ்லிம் சமூகத்தின் கல்வி மற்றும் ஆன்மிக மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தவர்.

ஒரு தந்தையைப் போல மிகவும் அன்பாக, உயர்ந்த பண்பாடுகளை வெளிப்படுத்திய வண்ணம் சக ஊழியர்களோடும் சந்தோஷமாக இணைந்து பணியாற்றினார்கள்.

அந்தப் பொழுதுகளை நினைக்கும்போது அதன் நினைவுகள் மனதுக்கு கனதியை ஏற்படுத்துகின்றன.

தவறுகளை அழகாக சுட்டிக்காட்டி, அதனை நல்ல முறையில் திருத்தித் தரக்கூடியவராகவும் எம்மை மதித்து நடக்க கூடியவராகவும் இருந்தார்கள்.

எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பது அவரது தனிச் சிறப்பம்சமாக காணப்பட்டது. அவரது உயர்ந்த பண்புகள் அவரின்பால் மக்களை கவர்ந்திழுத்தன.

முபாரக் ஹஸ்ரத் போன்ற மிக முக்கிய ஆளுமைகள் முஸ்லிம் சமூகத்தை விட்டு தொடர்ந்து பிரிந்து செல்வது அடுத்த தலைமுறை திட்டமிட்டு உருவாக்கப்பட வேண்டும் என்ற செய்தியை எமக்கு உரத்துச் சொல்கின்றது.

அவர்கள் தனக்காக வாழவில்லை சமூகத்திற்காகத்தான் வாழ்ந்தார்கள் என்ற மகுடத்தை அவர்களது வாழ்க்கை வரலாறு பறைசாற்றுகின்றது.

ஓர் ஊழியராக அல்லாது, அவரது சொந்தப் பிள்ளையைப் பார்ப்பது போன்றே எம்மைப் பார்த்தார்கள்.

அவர்கள் ஒரு சமூக சேவையாளராகவும் பல தொண்டு நிறுவனங்களில் ஆலோசகராகவும் ஒரு கொடை வள்ளலாகவும் இருந்துள்ளார்கள்.







### அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுடன்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் ஆளுமைகளில் பிரதானமானவர் என்பதுடன், அதன் வளர்ச்சிக்காக தனது இறுதி மூச்சுவரையில் அயராது உழைத்த பெருமைக்குரியவர்.

1979ஆம் ஆண்டு முதல் அதன் ஃபத்வாக் குழு உறுப்பினராக இருந்துள்ளதுடன், 1991ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கௌரவத் தலைவராகவும் 2003ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையில் அதன் உதவித் தலைவர்களில் ஒருவராகவும் 2010ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு முதல் தனது இறுதி மூச்சுவரை அதன் கௌரவப் பொதுச் செயலாளராகவும் பணி புரிந்தார்கள்.

ஜம்இய்யாவின் தற்போதைய கௌரவ தலைவர் அஷ்-ஷைக் முப்தி ரிஸ்வி அவர்களுக்கும் நிறைவேற்றுக் குழுவிற்கும்

ஆதாரபூர்வமாக, அனுபவபூர்வமாக, அங்க சம்பூரணமாகப் பேசுவார்கள். எவரையும் தாக்கிப் பேசுவதில்லை அன்னாரின் உரைகள் அரிசிமணிக்கோர்வை போன்றிருக்கும்.

* நற்பணிகளை தூண்டுதல்: சன்மார்க்கக் கல்வியில் நிபுணத்துவம் பெற்ற தாஈ என்பதுடன், தஃவாத் துறையில் ஈடுபட்ட எல்லா அமைப்புக்களையும் மதித்து, எல்லோரையும் ஊக்குவிக்கும் சிறந்த முன்மாதிரியைக் கொண்டிருந்தார்கள்.

நளினம்: தமது கொள்கைக் கோட்பாட்டினை முதன்மைப்படுத்திய போதும், அவர்கள் அனைவருடனும் நளினமாக நடந்து, ஏனைய கொள்கையோரிடம் நாகரிகமாக நடந்துக்கொண்டார்கள்.

பரந்த சிந்தனை: அவர்கள் எதனையும் பரந்துபட்ட, பக்குவப்பட்ட சிந்தனையுடன் நோக்குவார்கள்.

சிறந்த முன்மாதிரி: வணக்க வழிபாடுகள் முதல் நடத்தை, பேச்சு எழுத்து அனைத்திலும் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள்















அரபாத் பஹர்தீன்

# பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கம் நடாத்திய தலைவர் வெற்றிக் கிண்ணத்தை பேருவளை கிரேட் ஸ்டார் அணி சுவீகரித்துக் கொண்டது

(பேருவளை பீ.எம். முக்தார்)

பேருவளை உதைப்பந்தாட்டச் சங்கம் தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்திய நொக்கவுட் உதைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தர்கா நகர் ரெட் ஸ்டார் உதைப்பந்தாட்ட கழகமும் பேருவளை கிரேட் ஸ்டார் உதைப் பந்தாட்ட கழகமும் இறுதிப் போட்டியில் மோதிய நிலையில் பேருவளை கிரேட் ஸ்டார் அணி 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இச் சுற்றுப்போட்டியில் பேருவளை உதைப் பந்தாட்ட சங்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 19 உதைப் பந்தாட்ட கழகங்கள் பங்குபற்றின.

போட்டி ஆரம்பமாகி இடைவேளைக்கு முன் 28ம் நிமிடத்தில் கிரேட் ஸ்டார் அணி வீரர் முஹம்மத் அப்ஸால் தமது அணிக்கு கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார்.

அத்தோடுபோட்டி மேலும் சுருசுறுப்பாகிய தோடு இரு அணி வீ ர ர் களும் தமது அணிக்கு மேலும் கோல் பெற்றுக் கொடுக்க கடும் முயற்சி செய்தனர்.

இப்போட்இயில் சிறந்த வீர ராக கிரேட் ஸ்டார் அணியைச் சேர்ந்த முஹம்மத் ஸதான் தெரிவாகியதோடு சிறந்தா கோல் காப்பாளராக ரெட் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த முஹம்மத் மிஸ்காத் தெரிவுசெய்யப்பட்டார்.





இப்போட்டிக்கு எம். ரவீந்திர நடுவராகவும் முஹம்மத் முஸம்மில் - முஹம்மத் அஸ்லம் ஆகியோர் துணை நடுவர்களாகவும் முஹம்மத் பாரி நான்காவது நடுவராகவும் கடமையாற்றினர்.

சுமார் 3 தசாப்தங்களுக்கு மேலாக நடுவராக சேவையாற்றி விளையாட்டு ரசிகர்களின் நன்மதிப்பைப் பெற்ற முஹம்மத் முஸம்மில் இதன் போது கௌரவிக்கப்பட்மையும் விசேட அம்சமாகும்.

அன்றைய தினம் நடைபெறும் பரிசளிப்பு விழாவுக்கு பேருவளை உதைப்பட்டாட்டச் சங்கத் தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். றிஸ்வான் தலைமை வகித்தார். இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர், களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சன்ஜீவ ரணசிங்க ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளன உப தலைவர்களான ரஞ்சித் றொட்ரிகோ, கலாநிதி மனிலால் பிரணாந்து ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பேருவளை பிரதேச சபைத் தலைவர் பைஸான் நைஸ ர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். அஸ்லம், இலங்கை மருந்தக கூட்டுத்தாபணத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ஷரூமி ஹாஷிம், பிரசேத சபை உறுப்பினர்கள் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்துகொண்டணர்.

பேருவளை உதைப்பந்தாட்ட சங்க செயலாளர் முஹம்மத் ஸினான் பொருலாளர் ஏ.ஜே.எம். அக்பர் உட்பட பேருவளை உதைப்பந்தாட்ட சங்க முக்கியஸ்தர்கள், மேற்படி உதைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழக முக்கியஸ்தர்கள், மற்றும் பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பாக். மகளிர் அணிக்கு எதிரான ரி20 தொடரை தனதாக்கியது இலங்கை மகளிர் அணி



பாகிஸ்தான் மகளிர் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் தீர்மானிக்க 2ஆவது போட்டியில் சகலதுறையில் பிரகாசித்த இலங்கை மகளிர் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் ஒரு போட்டி மீதமிருக்க தொடரை 2:0 என கைப்பற்றி அசத்தியது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் மகளிர் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பங்கேற்றுள்ளது. அதில் முதலில் நிறைவுற்ற ஒருநாள் தொடரை இலங்கை மகளிர் அணி 2:1 என கைப்பற்றியிருந்தது. இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் கடந்த வெள்ளியன்று தம்புள்ளை ரங்கிரி கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பித்திருந்தது. இதன் முதல் போட்டியில் இலங்கை மகளிர் அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெறாறிருந்தது. இந்நிலையில் தொடரின் தீர்மானிக்க 2ஆவது போட்டி நேற்று (2) இடம்பெற்றது. இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் மகளிர் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஸ்ஷாவால் 48 ஓட்டங்களையும், முன்பீனா அலி 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சமுதி பிரபோத 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். பின்னர் 176 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை மகளிர் அணி வெறும் 17.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் அசத்தல் வெற்றியைப் பதிவு செய்ததுடன் தொடரின் ஒரு போட்டி மீதமிருக்க 2:0 என தொடரை தன்வசப்படுத்தியது. துடுப்பாட்டத்தில் சஞ்சனா காவிந்தி 46 ஓட்டங்களையும், சமரி அத்தபத்து 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் உம்மு ஹனி 2 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய கால்பந்துச் சம்மேளனத்தின் துணைத் தலைவரானார் ஜஸ்வர் உமர்

தெற்காசிய கால்பந்துச் சம்மேளனத்தின் துணைத் தலைவராக இலங்கை கால்பந்துச் சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர், ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பூட்டானில் நடைபெற்ற தெற்காசிய கால்பந்துச் சம்மேளனத்தின் நிறை வேற்று குழுக் கூட்டத்தில், சார்க் பிராந்தியத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பு நாடுகளின் ஒருமித்த ஆதரவுடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கால்பந்து வரலாற்றில் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படும் இந்த நியமனம், சர்வதேச கால்பந்து அரங்கில் இலங்கையின் பிரதிநிதித்து வத்தை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜஸ்வர் உமரின் தலைமையின் கீழ், இலங்கையின் பிபா உலகத் தரவரிசை 207ஆவது இடத்திலிருந்து 187ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

மேலும், அவர் ஏற்கனவே பிபா அடிமட்ட கால்பந்துக் குழு மற்றும் ஆசிய கால் பந்துக் கூட்டமைப்பின் வளர்ச்சிக் குழுவிலும் உறுப்பினராகப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.





# 76 ஆண்டுகால காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி: இலங்கைக்கு வரலாற்றுத் தங்கம் ஈட்டித்தந்தார் ருமேஷ்

(மொஹமட் ரிஷாட் )

ஸ்கொட்லாந்தில் நடைபெற்றுவரும் கிளாஸ்கோ 2026 பொதுநலவாய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் 89.75 மீற்றர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்த இலங்கையின் நட்சத்திர வீரர் ருமேஷ் தரங்க, தங்கப் பதக்கத்தை சுவீகரித்து வரலாற்றுச் சாதனை படைத்தார்.

ஸ்கொட்ஸ்டூன் விளையாட்டரங்கில் ஜூலை 31ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் ருமேஷ் தரங்க உட்பட உலகின் முன்னணி 12 ஈட்டி எறிதல் வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.

குறிப்பாக, உலக சம்பியனான கிரெனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ், 2024 பாரிஸ் ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற பாகிஸ்தானின் அர்ஷாத் நதீம் மற்றும் அதே ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்தியாவின் நீரஜ் சோப்ரா உள்ளிட்ட உலகின் முன்னணி வீரர்கள் இப்போட்டியில் களமிறங்கியிருந்தனர்.

இதில் இலங்கை வீரர் ருமேஷ் தரங்கவின் முதலாவது முயற்சி தகுதி நீக்கம் செய்யப்பட்டது. எனினும், இரண்டாவது முயற்சியில் ஈட்டியை 89.75 மீற்றர் தூரத்திற்கு எறிந்து முதல் இடத்துக்கு முன்னேறினார். அதுவே அவர் தங்கப் பதக்கத்தை சுவீகரிப்பதற்கான எறிதலாக மாறியது.

தொடர்ந்து மூன்றாவது முயற்சியில் அதனைவிட தூரத்திற்கு ஈட்டியை ருமேஷ் தரங்க எறிவார் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் அந்த முயற்சி தகுதி நீக்கம் செய்யப்பட்டது. அவரது அடுத்த மூன்று முயற்சிகளும் தகுதி நீக்கம் செய்யப்பட்டன.

இப் போட்டியில் இந்திய வீரர்களான நீராஜ் சொப்ரா (85.83 மீற்றர்) வெள்ளிப் பதக்கத் தையும், யாஷ் விர் சிங் (85.41 மீற்றர்) வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.



இதனிடையே, பொதுநலவாய விளையாட்டு விழா வரலாற்றில் மெய்வல்லுநர் போட்டியில் பதக்கம் வென்ற 5ஆவது வீரராகவும் அவர் இடம்பிடித்தார். இதற்கு முன் டங்கன் வைட் (1950 - 440 மீற்றர் தடை தாண்டல்), ஸ்ரீயானி குவன்ச (1998 - 100 மீற்றர் சட்டவேலி ஓட்டம்), சுகத் திலனரட்ன (1998 - 400 மீற்றர்) மற்றும் யுபுன் அபேகோன் (2022 - 100 மீற்றர்) ஆகிய வீரர்கள் பதக்கங்களை வென்றிருந்தனர்.

அதேபோல, இறுதிப் போட்டியில் ருமேஷ் தரங்க எறிந்த தூரமானது (89.75 மீ), பொதுநலவாய விளையாட்டுப் விழா வரலாற்றில் ஈட்டி எறிதல் பிரிவில் பதிவான இரண்டாவது மிகச் சிறந்த தூரமாக பதிவாகியுள்ளது. இதில் முதலிடத்தில் பாகிஸ்தானின் அர்ஷாத் நதீம் 2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் எறிந்த 90.18 மீற்றர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் நடப்பு ஒலிம்பிக் சம்பியனான



பாகிஸ்தான் வீரர் அர்ஷாத் நதீம் 77 மீற்றர் தூரம் வீசி 9ஆவது இடத்தைப் பிடித்து ஏமாற்றம் அளித்தார்.

எனவே, இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் ருமேஷ் தரங்க பல வரலாற்று சாதனைகளையும் படைத்தார்.

இதில் 1950இல் நியூசிலாந்தின் ஒக்லாந்தில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 440 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற டன்கன் வைட்டுக்குப் பின்னர் (76 ஆண்டுகளுக்குப் பிறகு) பொதுநலவாய விளையாட்டு விழா வரலாற்றில் மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு தங்கப் பதக்கத்தை வென்று கொடுத்தவர் என்ற பெருமையை ருமேஷ் தரங்க பெற்றுக்கொண்டார்.

அதுமாத்திரமின்றி, மெய்வல்லுநர் போட்டியில் மைதான நிகழ்ச்சியில் ஒன்றில் இலங்கை பொதுநலவாய விளையாட்டு விழாவில் வென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் தங்கப் பதக்கமாகவும் இது வரலாற்றில் இடம்பிடித்தது.

மேலும், 2006 மெல்போர்ன் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பளுதூக்கல் போட்டியில் சின்தன விதானகே தங்கப் பதக்கம் வென்ற பின்னர் இலங்கைக்கு கிடைத்த முதலாவது தங்கப் பதக்கம் இதுவாகும்.

88 ஆண்டுகால பொதுநலவாய விளையாட்டு விழா வரலற்றில் இலங்கை வென்ற ஐந்தாவது தங்கம் பதக்கம் இதுவாகும். இதற்கு முன் குத்துச்சண்டை வீரர் பெர்னி ஹென்ரிக்ஸ் (1938 - சிட்னி), மெய்வல்லுநர் வீரர் டங்கன் வைட் (1950 - ஒக்லாந்து), துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனைகளான புஷ்பமாலி ராம்நாயக்க மற்றும் மாலி விக்கிரமசிங்க (1994 - விக்டோரியா), மற்றும் பளுதூக்குதல் வீரரான சிந்தன கீதால் விதானகே (2006 - மெல்போர்ன்) ஆகிய வீரர்கள் பொதுநலவாய விளையாட்டு விழாவில் தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இந்த வெற்றி திடீரெனக் கிடைத்த ஒன்றல்ல. தகுதிச் சுற்றிலேயே 82.84 மீற்றர் தூரம் எறிந்து தனது பிரிவில் முதலிடம் பிடித்த ருமேஷ், முதன்மைத் தங்கப் பதக்க எதிர்பார்ப்பாளராகவே இறுதிப் போட்டிக்கு நுழைந்தார்.

இந்த ஆண்டு ரோமில் நடைபெற்ற டயமண்ட் லீக் (Diamond League) தொடரில் 82.82 மீற்றர் தூரம் எறிந்து புதிய இலங்கை சாதனை படைத்தார். இது 2026 ஆம் ஆண்டில் இதுவரை உலகில் பதிவான மிகச் சிறந்த திறனாகவும், ஆசிய வீரர் ஒருவரால் பதிவாக்கப்பட்ட இரண்டாவது மிக நீண்ட ஈட்டி எறிதலாகவும் அமைந்தது.

ஆனால், ருமேஷின் விளையாட்டுப் பயணம் ஈட்டி எறிதலுடன் தொடங்கவில்லை. கொழும்பு புனித பீட்டர்ஸ் கல்லூரிக்காக (St. Peter's College) வேகப்பந்து வீச்சாளராக விளையாடிய அவர், தனது இளம் வயதிலேயே மணிக்கு 134 கி.மீ வேகத்தில் பந்துவீசி சாதனை படைத்திருந்தார். அங்கிருந்து ஈட்டி எறிதலுக்கு மாறிய ருமேஷ், மிகக் குறுகிய காலத்தில் உலகின் முன்னணி ஈட்டி எறிதல் வீரர்களில் ஒருவராக உருவெடுத்தார்.

2025 உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற முதல் இலங்கையர் என்ற பெருமையைப் பெற்ற அவர், அதில் ஏழாவது இடத்தைப் பிடித்தார்.

கிளாஸ்கோ பொதுநலவாய விளையாட்டு விழாவில் தங்கப் பதக்கம் வெல்வது என்பது அதன்பிறகு அவர் வந்த பாதையின் மற்றுமொரு மிகப்பெரிய மைல்கல்லாகும்.

ருமேஷ் ஈட்டியை 89.75 மீற்றர் தூரத்திற்கு எறிந்தார். ஆனால், அந்த எறிதலுடன் இலங்கைத் மெய்வல்லுநர் விளையாட்டின் 76 ஆண்டுகால காத்திருப்பும் முடிவுக்கு வந்தது. எனவே, இப்போது நாம் 2028 ஒலிம்பிக் விளையாட்டு விழாவை நோக்கி எதிர்பார்ப்புடன் காத்திருப்போம்!